அளவுக்கு இந்த சீசனில் மழை பெய்யும். இதன் அளவு குறைந்தால் தமிழகத்தின் பாடு திண்டாட்டம்தான்.



பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் இயற்கையிடமிருந்து முறையாக பாடம் கற்று ஏராளமான ஏரிகள், குளங்கள் என நீர் நிலைகளை அமைத்துக் தன் வருங்கால சந்ததியினருக்கு அதுமட்டுமல்லாமல் கால்வாய்கள், கலுங்கு, மடை, மறுகால் ஓடை என விதவிதமான நீர் ஆதாரங்களை உருவாக்கி விவசாயத்தை செழிப்பாக்கினார்கள்.

இந்த நூற்றாண்டில் மட்டும் அரசின் கணக்குப்படி தமிழகத்தில் பெரிய சிறிய எரிகளுமாக சுமார்39 ஆயிரத்து 200 ஏரிகள் இருந்தன. இவற்றில் இப்போது எஞ்சியிருப்பது சுமார் முப்பதாயிரம் ஏரிகள் மட்டுமே. மற்றவை முற்றிலுமான அழிக்ப்பட்டது. எஞ்சியுள்ள ஏரிகளிலும் ஏறக்குறைய 20% முதல் 80% வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சென்னையின் பேரூர் ஏரி 800 ஏக்கர் பரப்பளவு கொண்டது. கடந்த சில ஆண்டுகளில் ஆக்கிரமிப்பாளர்களால் தற்போது 300 ஏக்கர் பரப்பளவுக்கு சுருங்கிவிட்டது.

இவ்வாறு ஏரிகளும், குளங்களும், அழிக்கப் பட்டு ஆக்கிரமிக்ப்பட்டதால் மழைநீர், கடலூக்கு கூட போக வழியின்றி தங்களின் இருப்பிடத்தை, அதாவது இன்றைய குடியிருப்பு பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. இதனால் ஏரி, குளங்கள், ஆக்கிரமித்து வீடுகள் கட்டிக் கொண்டவர்கள் மட்டுமல்லாது, மொத்த சென்னை நகர மக்களும் தண்ணீரில் மூழ்க்கடிக்கப்பட்டனர்.

இதற்கு தீர்வுதான் என்ன?

முதலில் ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். ஏரிகள், கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும். நகர்புறங்களில் தண்ணீர் தேங்காதவாறு புதிய காவல்வாய்கள் வெட்டப் பட்டு ஏரி, குளங்களினால் பெருக்கெடுத்து வரும் நீர், கடலில் கலக்க வழிவகை செய்ய வேண்டும். முக்கியமாக அதிகளவில் புதிய நீர்நிலைகள் ஏற்படுத்தி தண்ணீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும். இதனால் பூமியின் நீர்மட்டம் உயரும். இதனால் 500 அடி 1000 அடி என்பது போர்வெல் கிணறுகள் தோண்டவேண்டிய அவசியம் குறையும்.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கூறியது போல், “இயற்கையை நாம் அழிக்கிறோம். இயற்கை நம்மை அழிக்கிறது.” இதுதான் உண்மை. ஆக அழிக்கப்பட்ட இயற்கைக்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும். அழிக்கப்பட்ட நீர்நிலைகள் மீட்பது கடினம்தான். எனவே புதிய நீர் சேமிப்பு ஆதாரங்களை நிபுணர்களின் உதவியோடு கண்டறிந்து அவற்றை உருவாக்க திட்டங்களை தீட்டி பட்ஜெட்டில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து போர்கால நடவடிக்கையாக அரசு மேற்கொண்டால் எல்லாமும் சாத்தியமே.

நடக்குமா? நடக்காது!!!

ஆம் எதுவும் நடக்காது. வரும் கோடையில் மக்கள் காலி குடத்தை ஏந்திக் கொண்டு லாரிகளின் பின்னால் ஓடப்போகும் காட்சிகளையும் மீடியாக்கள் வெளிச்சம் போடும் காட்சியை மீண்டும் கண்டு வேதனைப்படுவோம்.

நாம் திருந்தவே மாட்டோம்.

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**



**மித்ரா டைம்ஸ்**
மாத இதழ்

ஆண்டு-1 டிசம்பர் -2015 இதழ் -7

வெளியீட்டாளர்-ஆசிரியர்
**M.சுந்தரமூர்த்தி**

இணையாசிரியர்
**K.பாலகிருஷ்ணன்**

தலைமை துணையாசிரியர்
**G.ராம்மோகன்**

துணையாசிரியர்கள்
**M.G.சேகர்**
**R.குணசேகர்**

உதவி ஆசிரியர்கள்
**B.துரைராஜ்**
**V.மோகன்ராஜ்**
**கோவை.K.விஜயராஜ்**

தலைமை நிருபர்
**K.ராதாகிருஷ்ணன்**

நிருபர்
பொள்ளாச்சி **M.சாகுல் ஹமீது**

வடிவமைப்பு
**V.ராஜராஜேஸ்வரி**

சட்ட ஆலோசகர்
**V.N.பிரசாத்** M.A.,B.L.,

**அலுவலக முகவரி**
# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 600 094.
போன் : 044-23744661, 23743007
e-mail:mitratimes2015@gmail.com

இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணையாசிரியரே பொறுப்பாவார்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது

# என்ணம்...



ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

வரலாறு காணாத மழை வழக்கமான வடகிழக்கு பருவமழை மீண்டும் ஒரு முறை சதிராட்டம் ஆடி காட்டியது. நாம் தான் வரலாறு காணாத மழை என்று புலம்புகிறோம். மழையின் வரலாற்றை ஒழுங்காக படித்திருந்தால், படித்த பாடத்தை நெஞ்சில் நிறுத்தியிருந்தால் இம்முறை பெய்த மழையை வரலாறு காணாத மழை இல்லவே இல்லை. பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இம்மாதிரி மழை கொட்டித் தீர்த்து பாடம் சொல்கிறது. பாடத்தை ஏற்க மக்கள் தயாரில்லை. இயற்கையும் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள தயாரில்லை.

அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் பெய்ய தொடங்கிய பருவ மழை நவம்பர் 10ம் தேதிக்கு மேல் பலத்த மழையாக மாறி நிலைமை படிப்படியாக மோசடைந்தது. மூன்று மாதங்களில் நின்று நிதானமாக பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் கொட்டி தீர்த்தது. மேலும் மேலும் கொட்டியது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. சென்னையை சுற்றியுள்ள செம்பரம்பாக்கம், புழல், பூண்டி ஏரிகள் நிரம்பியதால் உபரி நீர், வெளியேற்ற வேண்டிய கட்டாயம். இதனால் தாம்பரம், முடிச்சூர், பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், மணப்பாக்கம், சென்னையின் வேளச்சேரி, கோட்டூர்புரம், கொளத்தூர் மேலும் பல பகுதிகள் தண்ணீரால் மூழ்கின. மக்கள் வீட்டிலும் தங்க முடியவில்லை. என்று வெளியேயும் வரமுடியாத அளவுக்கு வெள்ளக் காடாகியது சென்னை மாகானம்.

பொதுவாகவே தமிழகம் மழை மறைவு மாநிலமாகும். அதாவது குறைந்த அளவு மழையே பெய்யும். ஆண்டு தோறும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை சுமார் 439 மி.மீ

தொடர்ச்சி 42 பக்கம்

# பெண்களை ஒதுக்குவது பொருளாதாரத்துக்கு பின்னடைவு

சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை, அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றெல்லாம் இளவயது முதலே சொல்லிச் சொல்லி பெண்களை வீடுகளிலேயே மட்டம் தட்டி வளர்ப்பது நம்முடைய ரத்தத்தில் ஊறியிருக்கிறது. உலக அளவில் தாய்வழிச் சமுதாயமாக இருந்த மனித சமூகம், தந்தைவழிச் சமூகமாக மாறிய பிறகு ஆணாதிக்கச் சமூகமாக உருவெடுத்தது. இதனால் என்ன குடிமுழுகி விட்டது என்று கருதுபவர்களும் அதிர்ச்சி அடையும் வகையில் ‘மெக்கென்ஸி உலக நிறுவனத்தின்’ (எம்.ஜி.ஐ) புதிய ஆய்வு முடிவுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் பெண்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. அதிலும் இந்தியாவில் ஒட்டுமொத்தப் பொருளாதார உற்பத்தியிலேயே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆண்களுக்குச் சமமாகப் பெண்களையும் நடத்தத் தவறுவது சமூக, கலாச்சார கண்ணோட்டங்களில் மட்டுமே அதிகம் பார்க்கப்பட்டு வருகிறது. இதன் பொருளாதார விளைவுகள் மலைக்க வைக்கின்றன.

இப்போது உலகின் எல்லா நாடுகளிலும் உழைக்கும் வயதில் உள்ளவர்களில் சரி பாதிப்பேர் பெண்கள். அவர்களை ஊதியம் அதிகம் கிடைக்கும் துறையில் பணிபுரியவிடாமலும், பணிபுரியும் துறைகளிலும் குறைந்த ஊதியம் கொடுத்தும் வஞ்சிக்கிறது சமுதாயம். பெண்கள் அவர்களுடைய முழு பணித்திறனுக்கு ஏற்ற ஊதியத்தைப் பெற முடியாமல் பல்வேறு வழிகளில் தடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாடும் தங்களுடைய பிராந்தியத்தில் வேகமாக வளரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடாக தாங்களும் வளர்ந்தால் 2025ல் 12 லட்சம் கோடி டாலர்கள் மதிப்புக்கு அதாவது இப்போதிருப்பதைவிட 11% அதிகமாக ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பை உயர்த்திக் கொள்ள முடியும். ஆண்களுக்கு இணையாக உழைக்கும் பெண்களுக்கு, ஆண்களுக்குத் தரப்படும் அதே ஊதியம் தரப்பட்டால் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு மேலும் 28 லட்சம் கோடி டாலர்கள் மதிப்புக்கு அதாவது இப்போதிருப்பதைவிட 26% அதிகரித்துவிடும். அதாவது சராசரி உற்பத்தி அதிகரிப்பைப்போல இரண்டு மடங்கு பெருகிவிடும். இந்தியாவில் 0.7 லட்சம் கோடி டாலர்கள், அதாவது 16% அதிகரிக்கும்.

ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்த வேண்டிய அல்லது பார்க்க வேண்டிய 15 பொதுவான அடையாளங்களை மெக்கின்ஸி நிறுவனம் பட்டியலிட்டது. 95 நாடுகளில் அந்த அடையாளங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்த்ததில் 40 நாடுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருப்பது தெரியவந்தது.

இந்த 15 அடையாளங்களைப் பொதுவாக 4 பிரிவாகப் பிரித் துள்ளனர். 1. வேலையில் சமத்து வம், 2. பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்புள்ள துறைகள் அல்லது அத்தியாவசியத் துறை கள், 3. சட்டப்பூர்வமான பணிப்பாதுகாப்பு உள்ள துறைகள் அல்லது அரசியல் ரீதியாக பாதுகாப்பு தேடக்கூடிய துறைகள், 4. உடல் ரீதியாகத் தீங்கு விளைவிக்காத வேலைகள் அல்லது சுயேச்சையாகச் செயல்பட வாய்ப்புள்ள வேலைகள் என்று இவை 4 பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு நடத்தப்பட்டது.

ஆடவர்களுக்கு நிகராக பெண்களுக்கும் பணிப்பாதுகாப்பு, ஊதியம், படிகள், சலுகைகள், வேலை நேரம் போன்றவை தரப்பட்டால் உற்பத்தி அதிகரிக்கும். அப்படி அதிகரிக்கும் உற்பத்தியின் உலக அளவிலான மதிப்பு, ஓராண்டில் சீனாவும் அமெரிக்காவும் மொத்தமாக உற்பத்தி செய்யும் பொருளாதார மதிப்புக்குச் சமமாக இருக்கும்.

இன்னொரு முறையிலும் கணக்கிடப்பட்டது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்று எல்லா கண்டங்களிலும் உள்ள நாடுகள் ஆண்களுக்குச் சமமாக பெண்களுக் கும் ஊதியம், படிகள் போன்றவற்றை அளித்து, தங்கள் பகுதியில் வேகமாக வளரும் நாட்டுக்கு இணை யான பொருளாதார வேகத்தைக் கடைப்பிடித்தால் ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடு களின் ஓராண்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார உற்பத்தி மதிப்புக்கு இணையாகத் தயாரிக்க முடியும்.












அவற்றின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு மேலும் 10% அதிகரிக்கும்.

நல்ல நிறுவனங்கள், அதிக ஊதியம் தரும் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் பெண்களுக்கு வேலைகளைத் தருவதில்லை. அப்படியே தந்தாலும் அவர்களை அதிக பொறுப்புள்ள பதவிகளுக்கு நியமிப்பதில்லை. பொதுவாக அதிக நேரம் செய்ய வேண்டிய வேலை, சலிப்பு ஏற்படுத்தும் வேலை, உடல் நலனுக்கு ஆபத்து விளைவிக்கும் வேலை, இழிவு என்று கருதத்தக்க வேலை, முக்கியத்துவம் அற்ற வேலை போன்றவற்றுக்கே பெண்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கு குடிநீர், உணவு, மருத்துவ உதவி, கைக்குழந் தைகளைப் பராமரித்துக்கொள் ளும் வசதி, போக்குவரத்து வசதி, காப்பீட்டு வசதி போன்றவை செய்து தரப்படுவதில்லை. தொழிற்சங் கங்கள் உள்பட அனைத்து இடங்களி லும் பெண்களுக்கு அடையாளத்துக் குத்தான் பிரதிநிதித்துவம் தரப்படு கிறது. ஊதிய வெட்டு, பணியிழப்பு, அதிக வேலை நேரம், அதிக பணிப் பொறுப்பு போன்றவை பெண்கள் மீது சுமத்தப்படுகிறது. பெண்களுக்குச் சட்டப்பூர்வமாக உள்ள பணிப்பாதுகாப்பு, சட்டப்பூர் வமான சலுகைகள், உரிமைகள் எடுத்துச் சொல்லப்படுவதே இல்லை. பெண்களின் புகார்கள், ஆலோசனை களைக் கேட்பதே இல்லை. பெண் களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும் நிறுவனங்கள் பெரும் பாலும் அவர்களை எந்த வேலைக்குச் சேர்த்துக் கொண்டனவோ அதே வேலையிலேயே நீண்டகாலம் வைத்து அவர்களுடைய ஆற்றலை வீணாக்குகின்றன. அவர்களுக்குக் கல்விப் பயிற்சி, தொழில்திறனை மேம்படுத்திக்கொள்ளும் பயிற்சிகளை நிறுவன வாயிலாக அளிப்பதே இல்லை.

பெண்களின் நிலை மேம்பட எல்லா துறைகளிலும் 6 விதமான தேவைகள் உள்ளது. உற்பத்தித் திறன் அதிகரிக்க நிதி ஊக்குவிப்புகளும் ஆதரவும், தொழில்நுட்பமும் கற்றுத் தரப்பட வேண்டும். பணிபுரிவதற்கேற்ற அடித்தளக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார ரீதியாக சொந்தக்காலில் நிற்க உதவவும், திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சியும் வாய்ப்பும் அளிக்க வேண்டும். அவர்களுடைய தயக்கங்களையும் அச்சங்களையும் போக்கி அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக்கி முன்னேறச் செய்ய வேண்டும். அதற்கேற்ப சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அரசுத்துறையில் வேலைவாய்ப்புகள் குறைவு என்பதால் தனியார் துறையில் இதை முனைப்பாகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.


தொழிலாளர் நலத்துறையில்கூட பெண் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்த தனிப் பிரிவுகளோ அதிகாரிகளோ கிடையாது. சமீபகால மாகத்தான் பாலியல் சீண்டல்கள் பற்றிய புகார்கள் அதிகரித்துள்ளதால், அத்தகைய புகார்களை உடனுக்குடன் விசாரிக்கவும் நடவடிக்கை எடுக் கவும் தனிப் பிரிவுகள் தொடங்கப் பட்டுள்ளன.

ஒரு நாட்டில் ஆண்களைவிட பெண்கள் மோசமாக நடத்தப்படு கின்றனர் என்பதை அறிய பின்வரும் அம்சங்கள் உதவுகின்றன. 1. பெண் சிசுக்களைக் கருவில் அழிப்பது, 2. பெண் குழந்தைகளின் இறப்பு, 3. பிறந்தது முதல் 6 வயது வரையிலான குழந்தைகளில் 1,000 ஆண் குழந்தைகளுக்குப் பெண் குழந்தைகளின் விகிதம், 4. ஆண் பெண் இடையிலான விகிதாச்சாரம், 5. பெண்களின் எழுத்தறிவு, 6. மகப்பேறின்போது தாயின் மரண விகிதம்.

இதில் முதலாவது அம்சப்படி, ஆண்டுதோறும் சுமார் ஒரு லட்சம் பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது. 2001ல் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 927 பெண் குழந்தைகள் இருந்தன. 2011ல் இதுவே 919 ஆகக் குறைந்துவிட்டது. 2011 கணக்கெடுப்புப்படி ஆண் களின் எழுத்தறிவு 82.14% ஆகவும் பெண்களின் எழுத்தறிவு 65.46% ஆகவும் இருக்கிறது. இந்த இடைவெளி அதிகம். மற்ற அம்சங்களிலும் பெண்களின் நிலை வருந்தும்படியாகவே இருக்கிறது.

தொழில், வர்த்தகம், சேவைப் பிரிவு என்ற மூன்றிலுமே பெண்களின் பங்களிப்பு அதிகம். ஆனால் விவசாயக் கூலியானாலும் வீடு கட்டும் தொழிலாளியானாலும் துப்புரவு வேலை செய்தாலும் செவிலியர், ஆசிரியர், அலுவலக ஊழியர் என்றாலும் பெண்களுக்குக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. இதற்கு ஏற்க முடியாத மற்றொரு காரணமும் கூறப்படுகிறது.

இது பெண்களுக்கு உபரி வருமானம் என்று. உழைப்பு, வேலை என்று வரும்போது ஆண்களைவிட அதிகம் உழைப்பைச் சுரண்டிக்கொண்டு, கூலி என்று வரும்போது குறைத்துக் கொடுப்பது இரட்டைச் சுரண்டலாகும். இதைத்தான் மெகின்ஸி நிறுவன ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.?



# மழை தந்த பாடம்

வடகிழக்கு பருவமழை எப்போது தொடங்குகிறது என்பது முதல் இப்போது வரையில் மழை நிலவரத்தை சென்னை வானிலை ஆய்வு மையம் அவ்வப்போது கணித்து முன்கூட்டியே தகவல்களை தெரிவித்து வருகிறது. ஆனால், இந்த முன்னறிவிப்பை கேட்டு, அதற்கு தகுந்தாற்போல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதையும் எடுக்காமல் மழை கொட்டோ கொட்டு என்று கொட்டிய பிறகு, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழை, வெள்ளநீரில் மக்கள் தவித்தபோது, கண்விழித்து பார்த்து திருதிருவென அரசு துறைகள் முழித்ததை நாடே அறியும். நீர் நிலைகள் உரிய காலத்தில் தூர்வாறாமல், ஏரிகள், குளங்களில் உள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருந்ததால் ஏற்பட்ட பாதிப்பை மக்கள் இந்த பருவமழை காலத்தில் தெளிவாக பாடம் கற்றுக் கொண்டார்கள். பருவ மழை காலங்களில் சாலைகள் சேதமடைவது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. இந்த பருவமழை காலத்தில் நெடுஞ்சாலைத் துறை அலட்சியம் காரணமாக, மழையால் உருக்குலைந்த சாலைகளில் சீரமைப்பு பணி உரிய நேரத்தில் மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்ற தகவல் மழை பாதிப்போடு, பொதுமக்களுக்கு கவலையையும் ஏற்படுத்தி உள்ளது என்று சொல்லலாம்.

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை 4,974 கி.மீ., மாநில நெடுஞ்சாலை 11,594 கி.மீ., மாவட்ட முக்கிய சாலை 11,289 கி.மீ., மாவட்ட இதர சாலைகள் 34,160 கி.மீ., என மொத்தம் 62,017 கி.மீ. நீளச் சாலைகள், நெடுஞ்சாலை துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. கனமழையால் மாநிலம் முழுவதும் 4,500 கி.மீ. நீள சாலைகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைக்க 40 கோட்டங்களுக்கும் நெடுஞ்சாலைத்துறை தலைமை உத்தரவிட்டுள்ளது. பொதுவாக பருவமழை தொடங்குவதற்கு முன்பாக, பராமரிப்பு பணிக்கு என்று குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கீடு செய்து இருக்க வேண்டும். ஆனால், இந்த பணியில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மெத்தனமாக இருந்துவிட்டனர்.

தற்போது, ஏற்கனவே உள்ள நிதியைக் கொண்டு சாலைகளை சீரமைக்கும்படி அந்தந்த கோட்டங்களுக்கு நெடுஞ்சாலைத்துறை தலைமை வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால், முக்கிய சாலைகளை தவிர்த்து பெரும்பாலான சாலைகள் சீரமைக்கப்படாமல் உள்ளன. ஏற்கனவே மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள், சீரமைக்கப்படாத சாலைகளில் செல்லும் பழுதான அரசு பஸ்களில் பயணம் செய்யும் துயர நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். முக்கிய சாலைகளை தவிர்த்து 2,800 கி.மீ. நீள சாலைகள் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. அதிகாரிகளின் அலட்சியத்துக்கு அளவே இல்லையா? என்ற கேள்வியும் எழுகிறது. அதிகாரிகளின் பணிகளை கவனிக்க வேண்டியது அரசு தானே, வழக்கமாக வங்கக்கடலில் உருவாகும் காற்றழுத்து தாழ்வு நிலை, புயல் சின்னம், புயல் எல்லாம் சென்னையை பயமுறுத்தி விட்டு கடைசியில் ஆந்திராவை தாக்கி விட்டு கரை கடந்து விடும். அப்படி தான் இந்த முறையும் இருந்தது என்றாலும், இரண்டு நாள் தொடர்ந்து பெய்த மழைக்கு சென்னை, திருவள்ளூர், காஞ்சி மாவட்டங்களில் எல்லா ஏரிகளும், குளங்களும் வழிய ஆரம்பித்து விட்டன. அடுத்தடுத்த ஏரி உடைப்புகள், செம்பரம்பாக்கம், பூண்டி அணைகளில் இருந்து ஆயிரக்கணக்கில் கனஅடி தண்ணீர் திறப்பு என்றெல்லாம் எச்சரிக்கை வந்ததும் வேளச்சேரியில் ஆரம்பித்து கூடுவாஞ்சேரி வரை எல்லா குடியிருப்பு பகுதிகளும் மினி ஏரிகளாகி விட்டன. இன்னொரு பக்கம் வட சென்னை வெகுவாக பாதிக்கப்பட்டது. சென்னையில் 20 ஆண்டில் இல்லாத அளவுக்கு இந்த இரண்டு நாள் மழைக்கே இந்த கதி ஏன்? யார் காரணம்? கடந்த ஆண்டு கூட இப்படி இல்லையே என்று நினைக்கலாம். ஆனால், கடந்த ஐந்தாண்டில் புற்றீசல் போல பெருகி விட்ட குடியிருப்பு பகுதிகள், பராமரிப்பில் மெகா தொய்வு, அதிகாரவர்க்கத்தின் இயலாமை, கவுன்சிலர் முதல் பல மட்டங்களிலும் அலட்சியம், லஞ்சம், ஊழல் எல்லாவற்றையும் இந்த சாதாரண மழை மூலம் இயற்கை தோலுரித்து காட்டி விட்டது.

# "மடையர்களை" போற்றுவோம்!!!

நம் முன்னோர்களின் ஏரி தொழில் நுட்பங்களை அறிந்துக் கொள்வதற்கு முன்பாக ஏரிகளைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை அறிந்துகொள்வோம். மனிதன் வெட்டியது அல்லாமல் இயற்கையாகவே உருவாகும் ஏரிகளும் உண்டு. அவை 6 வகைப்படுகின்றன. பூமித் தட்டுகளின் அசைவால் உருவாவது டெக்டோனிக் (Tectonic) ஏரி (உ.ம்: டிசோ மொரீரி ஏரி லடாக்). எரிமலை வெடிப்புகளால் உருவாவது வேல்கனிக் (Volcanic) ஏரி (உ.ம்: டவோடா ஏரிஜப்பான்). தொடர் காற்று வீச்சால் உருவாவது ஏயோலியன் (Aeolian) ஏரி (உ.ம்: சாம்பார் ஏரிஜெய்ப்பூர்). தொடர் நீர் பாய்தலால் உருவாவது புளூவியல் (Fluvial) ஏரி (உ.ம்: கபர்தால் ஏரிபிஹார்). பனிப் பாறைகளின் சரிவுகளால் உருவாவது கிளாசியல் (Glacial) ஏரி (உ.ம்: சந்திராடால் ஏரிஇமாச்சலம்). கடலோர இயக்கங்களால் உருவாவது கோஸ்டல் (Coastal) ஏரி (உ.ம்: பழவேற்காடு ஏரிசென்னை).

ஆனால், மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரிகளே அதிகம். இந்தியாவில் 2,52,848 ஏரிகள், குளங்கள் உள்ளன. தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மட்டும் 1,66,283 ஏரிகள் உள்ளன. சரி, மனிதன் ஏரிகளை உருவாக்க வேண்டிய அவசியம் என்ன? மனிதன் முதலில் மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்தான். மழை இல்லாதபோது மழை நீரை சேமிக்க ஆறுகளின் அருகே சிறு நீர் நிலைகளை ஏற்படுத்தினான். இதுவே ஏரியின் தொடக்கக் காலம். அடுத்ததாக ஆற்றில் இருந்து நீர் நிலைகளுக்குத் தண்ணீர் கொண்டுவர ஆற்றின் குறுக்கும் நெடுக்குமாக சவுக்கு, மூங்கில் கம்புகளை அடித்தார்கள். அவற்றின் இடையே கோரை மற்றும் நாணல் புற்களைக் கொண்டு அடைத்து, களிமண் பூசி சுவர்போல தடுப்பு ஏற்படுத்தினார்கள். இதன் பெயர் கொரம்பு. கொரம்பில் நீர் நிரம்பியபோது கால்வாய்கள் அமைத்து உயரமான இடங்களில் இருந்த குளங்களுக்கு நீரைப் பாய்ச்சினார்கள். இதுவே பிற்காலத்தில் அணைகள் அமைய அடிப்படையாக அமைந்தது.

பழந்தமிழர் நீர் நிலைகளை இலஞ்சி, வாவி, நளினி, கயம், கண்மாய், ஏரி, கோட்டகம், கேணி, குளம், மலங்கன், கிடங்கு, குட்டம், வட்டம், தடாகம், மடு, ஓடை, பொய்கை, சலந்தரம் என்று அழைத்தனர். அப்போது நீர் நிலைகளை உருவாக்குவது ஒரு மன்னனின் தலையாயக் கடமையாக கருதப்பட்டது. இதைத்தான் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார்,

'நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவண்தட் டோரே
தள்ளாதோர் இவண்தள்ளா தோரே'

(புறநானூறு 18) என்று பாடினார். அதாவது, 'எங்கெல்லாம் நிலம் பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கரை அமைத்து நீர் நிலைகள் உருவாக்கிய மன்னர்களே இந்த உலகில் தங்களது பெயரை நிலை நிறுத்திக்கொள்வார்கள்' என்கிறார் குடபுலவியனார். அதேபோல 10 வயது முதல் 80 வயது வரை குடிமராமத்துப் பணி செய்வது கடமையாக கருதப்பட்டது.



இப்படியாக நீர் நிலைகளை உருவாக்குவதும் பராமரிப்பதும் பழந்தமிழர் வாழ்வோடு ஒன்றியதாக இருந்தது.

நம் முன்னோர் ஏனோதானோவென்று ஏரிகளை வெட்டிவிடவில்லை. இன்றைய பொறியியல் தொழில்நுட்பங்களுக்கு எல்லாம் சவால் விடுபவை அவை. பாண்டியன் மூன்றாம் ராஜசிம்மன் கட்டிய ராஜசிம்ம மங்கலம் ஏரி உட்பட, தமிழகத்தின் பாரம்பரிய ஏரிகளைக் கழுகுக் கண் கொண்டு பார்த்தால் அவை பிறை நிலவின் வடிவில் இருப்பதைக் காணலாம். குறிப்பாக, பழந்தமிழர் ஏரிகளை 8ம் நாள் பிறை வடிவில் அமைத்தார்கள். ஏரிகள் இந்த வடிவத்தில் அமைவதால் கரையின் நீளம் குறைவாகவும், அதேசமயம் அதிக நீர்க் கொள்ளளவு கொண்டதாகவும் இருந்தன. இது சிக்கனமான வடிவமைப்பு முறை. இதைத்தான் சங்கப் புலவர் கபிலர்,

'அறையும் பொறையும் மணந்த தனைய
எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்
தென்நீர்ச் சிறுகுளம் கீழ்வது மாதோ
தேர்வன் பாரிதன் பறம்பு நாடே'
என்று பாடினார்.

ஏரியை வடிவமைத்தப் பிறகு அதிலிருந்து தண்ணீர் வெளியேற்ற கண்டுபிடித்த தொழில்நுட்பம்தான் 'மடை'. அந்த மடைகளை அமைக்க முதலில் பனை மரங்கள் பயன்படுத்தப்பட்டன. முதிர்ந்த பனை மரத்தை 'வாய்ச்சு' என்கிற கருவியால் வெட்டுவார்கள். மரம் வெட்டுப்படாமல் நெருப்புத் தெறிக்க வேண்டும். அதுதான் மடைக்கு உகந்த மரம். வைரம் பாய்ந்த கட்டை. அப்படியான மரங்களைத் தேர்வு செய்து, அதன் உள்தண்டை நீக்கிவிடுவார்கள். உறுதியான நீண்ட குழாய் தயார். இதனை ஏரிக் கரையின் அடியாழத்தில் பதித்து, அதன் உள் ஓட்டையில் கோரை, நாணல், களிமண் கலந்து அடைத்துவிடுவார்கள். இதுதான் ஆரம்பகால மடை. பின்பு பாறை மற்றும் மரச் சட்டங்களில் மடைகள் உருவாக்கப்பட்டன.

வெள்ளக் காலங்களில் மடைகளைத் திறப்பதற்கு என்றே ஆட்கள் இருந்தார்கள். மடைகளைத் திறப்பது சாதாரண விஷயமல்ல; உயிரைப் பணயம் வைக்கும் சாகசப் பணி இது. வெள்ளக் காலங்களில் ஏரியில் தண்ணீர் நிரம்பி வழியும். கரை வெடிக்கக் காத்திருக்கும். நேரம் கடந்தால் ஊரே அழிந்துவிடும். வெள்ளத்துக்குப் பயந்து மக்கள் ஊருக்கு வெளியே ஒதுங்கிவிடுவார்கள். அப்போது ஒரே ஒருவர் மட்டும் ஏரிக் கரைக்குச் செல்வார். கடல்போல கொந்தளிக்கும் ஏரிக்குள் குதிப்பார். நீரில் மூழ்கி, மூச்சடக்கி, கரையின் அடியாழத்தில் இருக்கும் மடையின் அடைப்பை திறந்துவிடுவார். மடை திறந்ததும் புயல் வேகத்தில் வெளியேறும் வெள்ளம். அதேவேகத்தில் வெள்ளம் அதை திறப்பவரையும் இழுத்துச் செல்ல முற்படும். அதன் வேகத்தில் இருந்து தப்புவது மிகவும் சிரமம்.

மடையைத் திறக்க ஒருவர் உள்ளே மூழ்கும்போதே உயிர் பிழைத்தால் உண்டு என்று கடவுளை வேண்டிக்கொண்டுதான் அனுப்புவார்கள். மூழ்குபவர் மனைவி, குழந்தைகளிடம் எல்லாம் ஆற்றாமையுடன் விடைப் பெற்றுக்கொண்டுதான் ஏரிக்குள் இறங்குவார். இப்படி மடை திறக்கச் சென்று மீண்டு வந்தவர் பலர். மாண்டுபோனவர் பலர். தியாகிகளான இவர்களைப் பற்றி எந்தக் குறிப்புகளோ, கல்வெட்டுகளோ வரலாற்றில் எதுவுமில்லாமல் போனதுதான் சோகம். இவர்கள் 'மடையர்கள்'என்று அழைக்கப்பட்டார்கள்.

மனதை தொட்டுச் சொல்லுங்கள், இனியும் யாரையாவது 'மடையா' என்று திட்டுவீர்கள் நீங்கள்?

மடையர்களை போற்றுவோம்!



முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது. என்ன காரணம்?!

கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள்.

அதன் பின் ஒளிந்திருக்கும் ஆன்மிக உண்மை தெரியவில்லை. ஆனால் அதன் பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என இப்போதுதான் தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி செம்பு(அ) ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும்.

இக்கலசங்களிலும் அதில் கொட்டப் படும் தானியங்களும், உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன.

நெல், உப்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்கா சோளம், சலமை, எள் ஆகியவற்றைக் கொட்டினார்கள்.

குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாகக் கொட்டினார்கள்.

காரணத்தைத் தேடிப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது.

வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இவ்வளவுதானா?

இல்லை,

பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது.

அதை இன்றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைபிடிக்கிறார்கள்.

காரணத்தைத் தேடினால், அந்த தானியங்களுக்குப் பன்னிரெண்டு வருடங்களுக்குத்தான் அந்த சக்தி இருக்கிறது.

அதன் பின் அது செயல் இழந்து விடுகிறது!!

இதை எப்படி அப்போது அறிந்திருந்தார்கள்.?!

ஆச்சர்யம்தான்.

அவ்வளவுதானா அதுவும் இல்லை. இன்றைக்குப் பெய்வதைப் போன்று மூன்று நாட்களா மழை பெய்தது அன்று?

தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது.

ஒரு வேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதை வைத்துப் பயிர் செய்வது?

இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பில்லை. இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே!

ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அதுதான் முதலில் 'எர்த்' ஆகும்.

மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள்.

உதாரணமாக கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாங்காமல் காக்கப்படுவார்கள்.

அதாவது சுமார் 75008 மீட்டர் பரப்பளவிலிருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்!

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன.

அது நாலாபுறமும் 75000சதுர மீட்டர் பரப்பளவைக் காத்து நிற்கிறது!

இது ஒரு தோராயமான கணக்கு தான்.

இதைவிட உயரமான கோபுரங்கள் இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது. படித்ததும் பகிரவும். இது நமது கலாச்சார உண்மை.


## மித்ரா டைம்ஸ் மாத இதழ்

ஆண்டு சந்தா-120

### ஆண்டு சந்தா படிவம்




பெயர் :....................

முகவரி :....................

....................

....................

....................

மாநிலம் :....................

தொலைபேசி :....................

கைபேசி :....................

மின்னஞ்சல் :....................

காசோலை & டி.டி. விவரம்:

எண் :....................

வங்கி :....................தேதி....................

தொகை :....................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மித்ரா டைம்ஸ் மாத இதழ்

#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,

சென்னை-600 094. போன்:044-23744662, 23743007.

# தமிழர்!! உணர்வால் நீ தமிழன்!





பாண்டியன் நெடுஞ்செழியன் , தான் கூறிய தீர்ப்பு தவறென்றுணர்ந்த கணம் , அந்த அரசவையிலேயே உயிரை மாய்த்துக் கொள்கிறான். சேரன் பெருஞ்சேரல் , இமயமலையில் வெற்றிக்கோடியை நாட்டியுள்ளான். கரிகால்வளவன், ஆக்க பூர்வ சிந்தனையில், கல்லணையை கட்டுகிறான்.மாமல்லன், சிற்பக்கலையில் உலகிற்கே எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்தை உருவாக்கினான். இராசராச சோழன், வானுயர்ந்த தஞ்சை பெரிய கோயிலைக்கட்டி, வான் புகழடைந்தான். அவன் மகன், இராசேந்திர சோழன், இந்திய துணைக்கண்டத்தில் பெரும் பகுதியையும், தென் கிழக்கு ஆசியாவையும் தன் குடையின் கீழ் கொண்டு வந்தான். அதியமான் , தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை, தான் உண்டு, ஆயுளை நீட்டித்துக்கொள்வதை விட, ஔவையார் உண்டால், தமிழகம் பயன் பெறும் என்று , எண்ணி,ஔவைக்கு கனியை அளித்து வள்ளல் என பெயர் பெறுகிறான்.

சாலையோரத்தில் விட்டுச்சென்ற தன் தேரின் மேல் படர்ந்த மலர்க்கொடியை அறுத்தெறிய மனமில்லாமல் , தேரை அந்த தாவரத்திற்கு விட்டுச் சென்று, வரலாற்றில் தன் மென்மையான மனதிற்காக இடம் பிடிக்கிறான் பாரி வள்ளல்....இந்த பதிவில் இடம் கொள்ளாது , நம் மூதாதையரின் புகழ் பாட. மெய் சிலிர்க்கும் நிகழ்வுகள் , சாதனைகள். தமிழர் பழம் பெருமை, மிகவும் அருமை.

தமிழா, இவர்கள் வழிவந்தவன் நீ ,

இவர்களின் உயிர் அணுக்கள்(ரீமீஸீமீ) உன்னிடம் உள்ளது உண்மை. மேற்கூறியது வரலாறு. வரலாறு சோறு போடாது! பழம் பெருமை பேசி அதில் குளிர் காயாதே!!நீ உன் வரலாற்றை அவர்கள் வழி எழுது.ஆதலால், நீயும், உன் திறமையை உலகிற்கு காண்பிக்க முயற்சி செய். உன் கடமைகளை ஔவை கூற்றிற்கிணங்க "செய்வன திருந்தச்செய்".

நெடுஞ்செழியன் போல் அறம் சார்ந்த வாழ்க்கை வாழ்!! கரிகாலனை போல ஆக்க பூர்வமான செயலில் இறங்கு. பாரி போல் மற்றவர்களின் உணர்வை மதி.வீரத்திற்கு உதாரணமான, இராசேந்திர சோழன், மதுவை தொட்டதில்லை. உன் வீரம் முழுமையாக வெளிப்பட வேண்டுமெனில், மதுவை தொடாதே!!!. குண்டு சட்டியை விட்டு எல்லைகள் கடந்து உன் வாழ்க்கை பயணத்தில் வீறு நடை போடு, பெருஞ்சேரல் போல்!!!

செயலில் இறங்கு! செயல்படு. செயலால் நான் தமிழன் என காட்டு.இவன்தான் தமிழன் என உலகிற்கு மார் தட்டிச்சொல். வாழ்த்துக்கள் ! வெற்றி உனக்கே!!!



# அண்ணன் தம்பி உறவு



தாய்தந்தை உறவு போல ஒரே கண்ணோட்டத்துடன் அண்ணன் தம்பி உறவை ஒப்பிட முடியாது. ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை, உரிமைப் போராட்டம்..! எனக்கு வேண்டும்..! என்ற பிடிவாதம் பிடிக்கும் தம்பி. தன் சொல் கேட்க வேண்டும் என்று அண்ணனும் அவ்வப்போது போடும் சிறுசிறு சண்டைகள் நிகழ்ந்தாலும், வீட்டிற்கு வெளியே வந்து விட்டால் தம்பியின் பாது காவலனாக மாறுவதுதான் வினோதம்.

இவர்களில் மூத்த அண்ணன் வளர்ந்து ஆளாகி உழைத்து பொருளீட்ட ஆரம்பித்து விட்டால் அண்ணன் தான் ஹீரோ. அண்ணனின் சொல் அரசு உத்தரவு போல் உடனே அமுலாக்கும் தம்பிகள் வெளிநாடுகளில் வேலை பார்க்கும் அண்ணன்மார்கள் தம்பிகளின் உரிமைகளின் நாயகன். தனக்கு தேவையானதை பெற துடிக்கும் துடிப்பு தம்பிகளின் ஆர்வத் துடிப்பு அது உரிமைகளின் உயிர் துடிப்பு.

என் அண்ணன் என்று சொல்லி பெருமிதம்படும் தம்பிகளின் சந்தோசத்திற்கு அளவே கிடையாது. தம்பிகளின் அந்த உரிமையை தம்பிகளிடமிருந்து பிரிப்பது என்பது இயலாத காரியம். தம்பிகளின் மனதில் ஆழ பதிந்திருக்கும் அந்த உயிர் மூச்சு போன்ற உரிமையை பிரிக்க அண்ணனுக்கு திருமணம் என்ற பந்தத்தின் மூலம் ஏற்ப்படும் உறவு அண்ணனின் மனைவி அண்ணியால் மட்டுமே முடியும்.

உறவின் வலிமை யாருக்கு அதிகம் யார் உரிமை அதிகம் பங்கு உள்ளவர் என்று பார்க்கும்போது அண்ணனின் மனைவிக்குத்தான். என்றாலும், உயிரோடு ஒட்டிய உறவான தம்பிகளை பிரிக்க நினைக்கும் அண்ணி கொஞ்சம் கொஞ்சமாக வெண்ணெய்யில் மயிலிறகை போல மிக நளினமாக தன் வயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதன் கால அளவு குறைந்தது பத்து வருடங்கள் எனலாம். ஆனால், மணந்த மறு நிமிடமே தன வசம் வரவேண்டும் என்பதன் விளைவுதான் குடும்பத்தில் தேவையில்லாத சச்சரவுகள்.

மனைவி சொல்லும் நியாயமான கருத்தைத் தனது தாயிடம் அல்லது தந்தையிடம் அல்லது அண்ணனிடம் தெரிவித்து விட்டால் போச்சு. வீட்டில் குழப்பம்தான். 'அவள் பெண்டாட்டி பேச்சைக் கேட்டுவிட்டு நடக்கிறான். பொம்பளை பேச்சைக் கேட்கிறவன் உருப்படுவானா? அப்புறம் 'ஆண்' முன்னோர் பெரியோர் வகுத்த வழியில் செல்ல வேண்டியதுதான்.

# மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

தவிர்க்க முடியாதபடி எமக்கு இடப் பட்ட ஒரு புவியியல் சாபம் போல அது எமக்கு அருகில் அசையாத ஒரு பெரு நிலமாக இருக்கின்றது. அதுதான் இந்தியா என்ற பெயரால் அழைக்கப்படும் நிலப்பரப்பு. இந்தவாரம் அதன் அறுபத்திநான்காவது சுதந்திரதினம் ஆகஸ்ட் 15ம் நாள் வந்துள்ளது. பிரித்தானிய காலனி ஆட்சியாளர்களின் வருகை இந்தியாவுக்கு செய்த மிகப்பெரிய நன்மை என்னவென்றால் நானூறுக்கும் மேற்பட்ட சமஸ்தானங் களாகவும், சிறிய தேசங்களாகவும் சிதறிக்கிடந்த ஒரு நிலப்பரப்பை இந்தியா என்ற பெயரில் தமது நிர்வாக தேவைக்காக ஒன்றிணைத்தது ஆகும். இந்தியா என்பது அதற்கு முன்னர் ஒருபோதுமே ஒரே தேசமாக இருந்தது கிடையாது. இந்தியா எங்கும் மண்ணுக்கு வெளியிலும் மண்ணுக்கு கீழேயும் விளைந்துகிடந்த பொருட்கள் காலகாலமாக அந்த நிலப்பரப்பை நோக்க சக்கரவர்த்திகளையும், மன்னர்களையும், கடற்பயணக்காரர்களையும் ஈர்த்துக்கொண்டே இருந்தது.


Mangal Pandey

வாசனைத்திரவியங்களும், வைரங்களும், பொன்னும் அயலில் இருந்த மொகலாய மன்னர்களை மட்டுமல்லாமல் கொஞ்சம் தூரத்தில் இருந்து பாரசீக சக்கரவர்த்தி களையும், மிக எட்டத்திலிருந்து மகாஅலெக்சாண்டர்களையும் கூட அந்த பாரதத்தை நோக்கி படையுடன் வரவைத்திருந்தது.



நாடுகளை தேடும் கடற்பயணங்கள் எல்லாம் ஒருவகையில் காலனிகளை உருவாக்கும் முயற்சிகளாகவே ஐரோப்பியரால் நடாத்தப்பட்டன. அந்த வகையில் 1498 போத்துக்கேசிய கடற்பயணக் காரரான வாஸ்கொட காமாவின் கப்பல் இந்தியாவின் கோழிகோடு துறைமுகத்துள் வந்தபோதே இந்தியாவுக்கான ஐரோப்பிய காலனி ஆட்சி ஆரம்பித்தது எனலாம். அதன்பின் ஒல்லாந்திய, பிரெஞ்சிய, பிரித்தானிய என்று நீண்ட காலனி ஆட்சிகள் நான்கு நூற்றாண்டுகளாக நீடித்து இறுதியில் உலகம் முழுதும் காலனி ஆட்சிகள் பொல பொலவென உதிர்ந்துகொண்டிருந்த காரணத்தாலும், இரண்டாம் உலக யுத்தத்தின் சுமையும் பாதிப்புகளும் ஐரோப்பிய காலனி ஆட்சியாளர்களை மிகவும் பாதித்தபடியாலும் போனால் போகிறது என்று பல ஆசிய நாடுகளை விட்டு அவர்கள் வெளியேறினார்கள்.

அப்படி ஒரு பொழுதுதான் இந்தியாவின் சுதந்திரதினமாக 1947 ஆகஸ்ட் 15ல் வழங்கப்பட்டது. ஆனால் மிகவும் தந்திரமாகவே இந்த இந்திய சுதந்திரம் என்பது சாத்வீக போராட்டம் ஒன்றினாலே கிடைத்தது என்றும் தனிமனித உண்ணாவிரதமும், கடற்கரையில் உப்பு அள்ளியதாலும்தான் சூரியனே அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராஜ்யம் வெளியேறியதாக ஒரு கருத்துருவாக்கம் காங்கிரஸ் பெருந்தலைகளால் காலகாலமாக செய்யப்பட்டு வருகின்றது. காந்திகள் இந்தியாவை தொடர்ந்து ஆளுவதற்கு மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் மீதான இந்த பிம்பங்கள் மிக அவசியமாக அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால் வரலாற்றின் மிகவும் மறைக்கப்பட்ட பக்கங்களாக இந்திய விடுதலைக்கான எண்ணற்றவர்களின் வீரமிகு போராட்டமும், அவர்களின் உயிர்த்தியாகங்களும் இருக்கின்றன.





இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தினுள் எந்தவிதமான தீவிரமும் கவனிப்பும் காட்டாத காந்தி தென்னாப்பிரிக்காவில் புகையிரதவண்டியில் இருந்து நிறவெறியனால் வெளியே தள்ளி விழுத்தப்பட்ட பின்னரே இந்தியாவின் விடுதலை அரங்கினுள் 1915ல் வருகிறார். ஆனால் அதற்கு பல பத்து வருடங்களுக்கு முன்னரே ஐம்பத்தி ஏழு வருடங்களுக்கு முன்னரே பிரித்தானியருக்கு எதிராக உருவான சிப்பாய்க் கலவரத்தின் வீரமிகு புதல்வர்களை பற்றிய விபரங்கள் ஏறத்தாள முழுமையாக மறைக்கப் பட்டே இருக்கின்றன. அதில் ஒரு உருக்கமான கட்டம் என்னவென்றால் 1857ம் ஆண்டு பாரக்புரி என்ற இடத்தில் பிரித்தானிய ராணுவ அதிகாரியை தாக்கினான் என்பதற்காக மங்கள் பாண்டே என்ற இந்திய வீரனை கைது செய்யும்படி பிரித்தானிய படையில் இருந்த ஒரு இந்திய ஜமேதாருக்கு பிரித்தானிய தளபதி ஜெனரல் கார்சே உத்தரவிட்டான். தனது தேசத்தவன் ஒருவனை கைதுசெய்ய மறுத்த ஜமேதாரும், மங்கள் பாண்டேயும் 1857 ஏப்ரல் 7ம் தேதி ஒன்றாக தூக்கிலிடப்பட்டார்கள்.



இதன் தொடர்ச்சியாக எழுந்த கலவரத்தை அடக்குவதற்கு பிரத்தியேக படைகளை சீனாவை நோக்கி சென்று கொண்டிருந்த தமது ஐரோப்பிய படைப்பிரிவில் இருந்தும் பெற்றுக்கொண்டு போராட வேண்டிய அளவுக்கு இந்தியர்களின் எழுச்சி எழுந்திருந்தது. இறுதியில் 1858 ஜூலை 20ம் தேதி குவாலியரில் நடந்த மோதலில் ராணி

லட்சுமிபாய் கொல்லப்பட்டு குவாலியர் கோட்டை பிரித்தானியரால் மீட்கப்பட்டதுடன் தற்காலிகமாக ஓய்ந்தது. வெறும் வர்த்தக கம்பெனியான கிழக்கிந்திய கம்பெனியை வைத்து இனியும் இந்தியாவை ஆளமுடியாது என்று பிரித்தானியர் முடிவெடுத்த தருணம் இதுதான். இந்திய விடுதலைக்கான முதற்புரட்சி, முதல் எதிர்வினையின் மூலவர்களை பற்றிய பக்கங்கள் ஏனோதானோ என்று விரிவாக இல்லாமலும், மறைத்தும் வைத்துக்கொண்டு இந்தியாவின் சுதந்திரதினம் தனது அறுபத்திநான்கு வருடத்தை கடந்து வந்திருக்கிறது.

இதோ இந்தியாவின் விடுதலையை மானுட விடுதலையை மானுட விடுதலையாகவும், சமதர்ம விடுதலையாகவும் கனவுகண்டு அதற்காகவே போராடி தூக்குக்கயிற்றை முத்தமிட்ட பகத்சிங்கின் வரலாற்றை பாருங்களேன். எத்தனை உன்னதமானது அவனது வாழ்வு. இருபத்து மூன்று வயதுக்குள் முடிந்துபோன அவனின் வாழ்வு எங்கும் காணப்படும் இலட்சிய உறுதியும், சுதந்திரத்தின் மீதான வாஞ்சையும்தான் இன்றைய இந்தியாவின் விடுதலை. இன்றைக்கும் அவனின் நினைவு தினத்தன்றைக்கு (மார்ச்23) அரசியல்வாதிகள் வந்து மலர்மாலை வைப்பதுடன் அவனின் நினைவுகள் மறைக்கப்பட்டு மறக்கப்பட்டுள்ளது. இன்றைக்கும் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் சட்லெஜ் நதியின் கரையில் இருக்கும் அவனின் நினைவிடம் விடுதலைக்கு போராடும் அனைத்து மக்களுக்கும் ஆயிரம் செய்திகளை சொல்லியபடிக்கு அமைதியாக நின்றுகொண்டிருக்கிறது.

இந்தியா விடுதலை அடையவேண்டும் என்பதற்கும் மேலாக அது அனைவரையும் சமனாக நடத்தும் ஒரு சமதர்ம தேசமாக மலரவேண்டும் என்பதற்பகாக இந்துஸ்தான் சோசலிச குடியரசு ஒன்றை அமைக்கும் அமைப்பு ஒன்றை கட்டியெழுப்பி புரட்சியை விதைத்தவன் அவன். லாலாலஜபதி ராய் என்ற மிதவாத தலைவருடன் ஆயிரம் முரண்பாடுகளும், கருத்துவேறுபாடுகளும் பகத்சிங்குக்கு இருந்தபோதிலும் லாலாலஜபதிராய் பிரித்தானிய காவல்துறையால் கொல்லப்பட்போது அதற்கு பதில்சொல்ல பகத்சிங் முடிவெடுத்தார். அதற்கு காரணமான அதிகாரி சாண்டிரஸை அழித்த வழக்கில் பகத்சிங்கிற்கும் நண்பர்களுக்கும் மரணதண்டனை கிடைத்தது.

பகத்சிங்கிற்கும் நண்பர்களுக்கும் தூக்குத்தண்டனை கொடுக்கக்கூடாது என்று நாடு முழுவதிலும் மக்கள் கூட்டமாக தெருக்களில் எழுச்சி கொண்டிருந்தபோது இன்று இந்தியாவின் தேசத்தந்தையாக உருவகப்படுத்தப்படும் காந்தி இந்தியாவின் வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். வைசிராய் என்பவர் இங்கிலாந்து ராணியின் பிரதிநிதியாக இந்தியாவை ஆளுபவர்). பகத்சிங்கின் தூக்குதண்டனைக்காக பிரித்தானியர் நிர்ணயித்த தேதிக்கு மூன்றுநாட்கள் முன்னதாகவே அந்த தண்டனையை வழங்குங்கள் என்று கேட்டிருந்தார்.

ஏனென்றால் தூக்குத் தண்டனை நிறைவேற்ற நிர்ணயிக்கப்பட்ட நாளில் அவருக்கு வேறு முக்கிய அலுவல் இருந்ததாம். பகத்சிங் காந்தியையோ அவரின் போராட்ட முறைகளையோ, அவரின் இந்துமத சனாதன முறைகளையோ ஏற்றுக்கொண்டவராக இருந்தது கிடையாது. அதனால் அந்த அற்புத மானவீரனின் அறமும், விடுதலைக்கான பிரகடனமும் பெரிய அளவில் இன்றளவும் இந்தியாவில் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆனால் பகத்சிங் இத்தகைய அங்கீகாரங்களையோ, அடிபணிவுகளையோ ஒருபோதும் பொருட்டாக நினைக்காமல் போரடிய வீரன். அவன் மிகவும் தெளிவாக தன்னை யார் என்றும் தான் யாருக்காக போராடுகிறேன் என்றும் தெளிவாக இருந்தவன். "நான் ஒரு மனிதன். மனித சமூகத்தை பாதிக்கும் அனைத்தும் என்னோடும் சம்பந்தப்பட்டவையே" என்று தனது இருபத்திஇரண்டு வயத்துக்குள் பிரகடனப்படுத்தியவன் அவன். பகத்சிங்கின் முயற்சிகள் இருபத்துமூன்று வயத்துக்குள் முடிந்திருக்கலாம். ஒரு தூக்குகயிற்றின் இறுக்கத்துடன் அவனின் வாழ்வு முடிந்திருக்கலாம்.

பகத்சிங் தனது இறுதிக்கணம்வரைக்கும் தனது தாயகத்தின் மீதான பற்றுதலை, தனது மண்ணின் மீதான சமரசம் செய்யமுடியாத தாகத்துடனும் இருந்தவன். அவனுக்கு தூக்குதண்டனை கொடுத்தபோதும் அவர் அதனை ஏற்காமல் தன்னை துப்பாக்கியால் சுட்டோ, பீரங்கியால் சுட்டோ கொல்லும்படி கேட்டவர்.

ஏன் அப்படி கேட்கிறாய் என்று அதிகாரிகள் கேட்டபோது தூக்கிலே போட்டால் உயிர் பிரியும்போது தனது கால்கள் தனது தாய்மண்ணில் படாமல் அந்தரத்தில் இருக்கும் என்றும், துப்பாக்கியால் சுட்டால் தனது உயிர்போகும்போது தனது கால்கள் தனது மண்ணை தீண்டியபடியே போகும் என்றும் எந்தவிதமான சலனமும் இல்லாமல் வீரமுடன் கூறியவன் அவன். இந்திய சுதந்திரம் என்பது அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் காந்தியின் முயற்சியாக இருக்கலாம். ஆனால் அடிமைப்பட்ட ஒரு இனத்தின் மக்கள் என்ற முறையிலும், விடுதலைக்காக போராடவேண்டி கட்டாயத்துக்குள் வாழும் ஒரு மக்கள் என்ற முறையிலும் எமக்கு பகத்சிங்கின் வாழ்வுதான் இந்திய சுதந்திரமாக தெரிகிறது. பகத்சிங் போன்ற பல்லாயிரம் வீரர்களினதும், இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கிய சுபாஸ்சந்திரபோசின் படையில் போராடிய பல ஆயிரம் இந்திய வீரர்களின் கனவாகவே எமக்கு இந்திய சுதந்திரம் தெரிகிறது.

பகத்சிங் தனது சிறையின் சுவரில் எப்போதும் எழுதிவைத்திருந்த சார்ல்ஸ் மகாய் அவர்களின் கவிதை பகத்சிங்கின் ஆன்மத்தை அழகாகவே காட்டுகிறது.

"பகைவர்களே இல்லை என்கிறாயா..?
அந்தோ என் நண்பனே
இப்பெருமிதம் மிக அற்பமானது
உனக்கு எதிரிகளே இல்லாது போனால்
நீ செய்திருப்பது அற்ப சொற்பமானது

துரோகி யாரையும் வீழ்த்தியிருக்க மாட்டாய் போராட்டத்தில் கோழையாக இருந்திருப்பாய்.." என்று நீளும் இந்த கவிதையை போலவே பகத்சிங்கிற்கு அவர் வாழும் போது எதிரிகளாக பிரித்தானிய பேரரசு இருந்தது. அவர் மரணித்த பிறகு அவரின் நினைவையும் அவரின் கருத்துகளையும் மறைக்கும் இந்தியாவை ஆளும் காந்திகள் இருக்கிறார்கள்.

# யாருடைய ஆட்சி அமைந்தால் நன்றாக இருக்கும்.....?

**ஏ.ஆர்.ரஹ்மான் பதில்**

AR. ரஹ்மானிடம் அமெரிக்காவில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி

** உங்கள் நாட்டீல் பிஜேபி, காங்கிரஸ் ஆட்சியில் எதை விரும்புவீர்கள், இல்லை இவையில்லாமல் வேற யார் ஆட்சி அமைத்தால் நலமாக இருக்கும் என விரும்புகிறீர்கள்?



பதில் (ரஹ்மான்)

இந்தியாவில் யார் ஆட்சி சிறப்பானது என்று நான் கூறுவதை விட பண்டைய அரேபியாவில் கலிபா எனப்படும் உமர் அவர்களின் ஆட்சி போல் இருந்தால் நலமாக இருக்கும் என விரும்புகிறேன்!!!

சுதந்திரத்தை எழுதி கொடுத்த பின் ஆங்கிலேய அதிகாரி

சுதந்திர இந்தியாவின் ஆட்சி எவ்வாறு இருக்க ஆசைப்படுகிறீர்கள் என கேட்ட போது

காந்தி அவர்கள் உடனே அளித்த பதில்

அரேபிய தேசத்தில் ஜனாதிபதி உமர் என்பவரின் ஆட்சி போல் இருக்க விரும்புகிறேன்

இதை படித்தவுடன் உங்களில் எழும் கேள்வி யார் அந்த உமர்?

உமர் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு சொல்லுகிறேன்

அதன் பின் உங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

உமர் அவர்கள் ஆட்சிகாலத்தில் பாலஸ்தீன் யுதர்களிடம் இருந்து வெற்றி பெற்று மீண்டும் இஸ்லாமியர் கைவசம் வந்து விட்டது அதன் ஜனாதிபதியாக உமர் அவர்ள் ஆனார்.

தான் செல்லாமல் தன் படைவீரர்களை வைத்து மீட்டார்

அப்பொழுதைய பாலஸ்தீன வாசிகள் தங்களின் ஆட்சியாளர் உமர் அவர்களின் முகத்தை பார்க்க ஆசைப்பட்டு ஆர்வத்தில் கிளர்ச்சி செய்தனர்

இதையறிந்த உமர் அவர்கள் தனக்கு துனையாக ஆட்சியின் பணியாளர் ஒருவறை அழைத்து கொண்டு பாலஸ்தீனம் புறப்பட்டு சென்றார்

( சவுதி அரேபியா தேசத்தில் இருந்து தற்போதைய இஸ்ரேலுக்கு ஒரு ஒட்டகத்தில் உமர் அவர்களும் அவரின் வேலையாளில் ஒருவரையும் அழைத்து சென்றார் என்றால் எத்தனை நாட்கள் ஆகியிருக்கும்? )

உமர் அவர்கள் செல்லும் வழியில் தன் பனியாளிடம் ஒரு குறிப்பிட்ட அளவை சொல்லி

அதாவது இரண்டு கிலோமீட்டர் அளவுக்கு ஒட்டகத்தில் நான் அமர்வேன்

பின் இரண்டு கிலோமீட்டர் நீ அமர்ந்து வா என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்

(உமர் அவர்களே ஒட்டகத்தில் முழுவதுமாக அமர்ந்து வந்தாலும் யாரும் கேட்க முடியாது

இருந்தும் சம உரிமையை பேணினார்)

அவ்வாரே மாறி மாறி சுழற்சி முறையில் பயனித்து பாலஸ்தின எல்லையை நெருங்கிவிட்டார்கள்

பாலஸ்தின எல்லைக்குள் மக்கள் இருவழியிலும் பெருங்கூட்டமாக காத்து நின்றார்கள்

அவர்களை முஸ்லீம் தளபதி ஒருவர் கட்டுபடுத்தி உமர் வரவை எதிர் நோக்கியிருந்தார்

உமர் அவர்கள் பாலஸ்தின எல்லைக்குள் நுழையும் நிலையில் உமர் அவர்களின் ஒட்டகத்தில் அமரும் தூரம் முடிந்து விட்டது,

உமர் அவர்கள் ஒட்டகத்தை பணியாளிடம் தந்தார்

பணியாளோ தற்போது எல்லைக்குள் நுழைய இருக்கிறோம் நீங்கள் தொடர்ந்து அமருங்கள் எனக் கூறினார்.

மேலும் மக்கள் காணும் போது நீங்கள் ஒட்டகத்தில் அமர்வதே சரியென்றார்

ஆனால் உமர் அவர்களோ

நான் இங்கு ஒட்டகத்தில் மன்னனாக அமர்வதைவிட

நான் ஒப்பந்தத்தை மீறாத அடியானாக இறைவன் முன் நிற்க ஆசைபடுகிறேன்

அதனால் மிகவும் களைப்பாக இருக்கும் நீ அமர்ந்து கொல் என்று

பணியாள் அமர்ந்திருக்கக ஒட்டகத்தை பிடித்து கொண்டு பாலஸ்தினத்தில் புகுந்தார்

மக்கள் அனைவரும் பணியாளரை மன்னரென நினைத்து மகிழ்ச்சியி ஒட்டகத்தில் வீட்டீருப்பவரை பார்த்து மகிழ்ச்சி கொணடார்கள்

( மக்கள் பணியாளரே மன்னன் என நினைக்க மற்றொரு காரணம் பணியாளின் சட்டையில் மூன்று கிளிச்சல்கள்

ஒட்டகத்தை பிடித்து வந்த உமரின் ஆடையிலோ 16 கிளிச்சல்கள்)

அங்கே இருந்த மக்கள் யாரும் இதற்கு முன் உமர் அவர்களை பாத்தில்லை என்பதால் பணியாளை மன்னனாக உறுதியாக்கி பார்த்தார்கள்

அங்கே முஸ்லீம் தளபதி காலித் பின் வாலித் அவர்கள் ஒட்டகத்தில் பனியாள் அமர்ந்து உமர் நடந்து வருவதை கண்டதும் தன் உடைவாளை உருவிக் கொண்டு பனியாளை வெட்டுவதற்காக விரைந்து வந்தார்

அதை கண்ட உமர் காலித் அவர்களை தடுத்து நீங்கள் வரம்பு மீற வேண்டாம்

மேலும் ஒப்பந்தபடியே அவர் அமர்ந்து வருகிறார் எனக் கூறினார்

அதன் பின்னே தளபதி அவர்கள் தன் வாளை உறையிலிட்டார்

( காலீத் யார் தெரிகிறதா? தற்போது பேஸ்புக்கில் மிகப் பெருமையாக பதிவிடும்

இஸ்லாத்தின் எதிரிகளே;

நீங்கள் பணம் பொருள் பெண் மற்றும் மாடமாளிகைகளை நேசிப்பது போல் மரணத்தை நேசிக்கும் மாபெரும் கூட்டத்துடன் மோத நினைக்கிறாயா?

என்ற வார்த்தைக்கு சொந்தக்காரர்

மேலும் இவர் தளபதியாக இருந்து போரிட்ட அனைத்து போரிலும் முஸ்லீம் படை வென்றது)

அப்போது அங்கிருந்த மக்கள் உமரின் நேர்மை, தன்னடக்கம் அனைத்தையும் கண்டு

இப்படி ஒருவர் ஆட்சியில் தாங்கள் குடிமக்கள் என்பதை நினைத்து பெருமைபடுகிறோம் என்றனர்

தற்போதைய உலகத்தில் காரின் கதவை விரைவாக திறந்து விடவில்லை என்பதற்காக பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர் தான் ஒரு ஜனாதிபதி என்பதை நினைத்து கர்வம் கொள்ளாதவர் உமர் ரலியல்லாஹீ அன்ஹா

# சினிமா

ஆணாதிக்கம் இருந்துட்டுப் போகட்டும் திரையுலகம் ஆணாதிக்கம் நிறைந்தது என்று சிலர் குறை படுகிறார்கள். அப்படி இருப்பதில் தவறு இல்லை. கதாநாயகிகளை விட கதாநாயகர்கள் மிகவும் கஷ்டப்பட்டு நடிக்கிறார்கள். பாவம், சண்டைக்காட்சி களில் அவர்கள் படும் கஷ்டங்களை ‘பாகுபலி’ படத்தில் நான் நடித்து உணர்ந்து இருக்கிறேன். ரசிகர் மன்றங் களும் அவர்களுக்குத்தான் இருக்கிறது. எனவே சினிமாவில் ஆணாதிக்கம் நிறைந்து இருப்பதில் தவறு இல்லை. இருந்துவிட்டுப் போகட்டும்.





ஓ காதல் கண்மணி’ உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்திருப்பவர் நித்யா மேனன். தற்போது அப்பாவின் மீசை உள்பட 3 படங்களில் நடித்து வருகிறார். மலையாள நடிகைகள் லட்சுமிமேனன், ரம்யா நம்பீஸன் போன்றவர்கள் சொந்த குரலில் பாடுவதற்கு அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அந்த வரிசையில் நித்யா மேனனுக்கும் சொந்த குரலில் பாட வேண்டும் என்று ஆசை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அவர் தற்போது சொந்தமாக பாடல் ஆல்ப வீடியோ தயாரித்து வெளியிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் இருந்து இரவு 8.30 மணிக்கு காரில் ஹோட்டலுக்கு கிளம்பினேன் நள்ளிரவாகிவிட்டது, இனியும் காத்திருக்க முடியாது என்று காரில் இருந்து இறங்கி அருகில் உள்ள ஹோட்டலை தேடி சென்றேன். மழையால் சாலைகள் பாதிகப்பட்டு போக்குவரத்து முடங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். மக்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டனர். தென்னிந்தியா தான் என் வீடு என்று நினைப்பவள் நான். இங்கு நான் பாதுகாப்பாக உணர்கிறேன். என் நம்பிக்கையை மக்கள் உண்மையாக்கினர். மக்கள் ஹோட்டலுக்கு செல்ல எனக்கு வழி காண்பித்து உதவி செய்தனர். நான் பாதுகாப்பாக இல்லை என்று ஒரு நொடி கூட நினைக்கவில்லை. என்னை வெளியாளாக பார்க்காமல் மக்கள் காண்பித்த அன்பையும், பாசத்தையும் பார்த்து நெகிழ்ந்துவிட்டேன்.





சினிமா

சினிமா

இளைய தளபதி விஜய் எப்போதும் படப்பிடிப்பிற்கு வெளியே அமைதியாக தான் இருப்பார். ஆனால், ஆக்?ஷன் கூறிய அடுத்த நிமிடம் அதிரி புதிரி செய்து விடுவார்.அந்த வகையில் தெறி படத்தின் படப்பிடிப்பு தற்போது கோவாவில் நடந்து வருகின்றது. அதிலும் முக்கியமான சண்டைக்காட்சி ஒன்று எடுக்கப்பட்டு வருகிறது.இதை ஹாலிவுட் ஸ்டண்ட் மாஸ்டர் வடிவமைக்க, இளைய தளபதி இந்த் சண்டைக்காட்சியில் மிரட்டி விட்டாராம். படக்குழுவே இவரின் ஆக்ரோஷத்தை கண்டு அசந்து போய் விட்டதாம்.





தனுஷ் தீவிர கார் ப்ரியர் என்பது பலருக்கும் தெரியாத விஷயம். இந்நிலையில் இவர் தற்போது ரோல்ஸ் ராயல்ஸ் காரை வாங்கயிருக்கிறாராம். இந்த காரின் விலை ரூ 2 கோடி 48 லட்சம், மேலும் இதற்கு வரியாக ரூ 2 கோடி 85 லட்சம் செலுத்தியுள்ளாராம்.
இதனால் கிட்டத்தட்ட ரூ 5 கோடிகளுக்கு மேல் கொடுத்து தனுஷ் இந்த காரை வாங்கியுள்ளதாக கிசுகிசுக்கப்படுகின்றது.

தென்னிந்திய சினிமாவில் புதுபுது முயற்சி களை படத்திற்கு படம் செய்பவர் சூர்யா. இவரின் கடைசி இரண்டு படங்கள் சரியாக போகவில்லை. இதனால், இந்த முறை 24 என்ற படத்தில் கடுமையாக உழைத்து வருகிறார். இப்படத்தை விக்ரம் குமார் இயக்கியுள்ளார். சமீபத்தில் ஒரு பத்திரிக்கையில் பேட்டியளித்த விக்ரம் குமார், ‘இந்த படத்தில் ஹாலிவுட் மேக்கப் கலைஞர்கள் தான் சூர்யாவிற்கு மேக்கப் போட்டனர். அவர்கள் சூர்யாவின் நடிப்பையும், அர்ப்பணிப்பையும் கண்டு அசந்து போய்விட்டனர்’ என கூறியுள்ளார்.



# படித்தவர்கள் இந்தியா திரும்புவது எப்போது

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அறிவுசார் சமூகத்தின் பங்களிப்பு கணிசமானது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இத்தகையோர் அதிகமிருப்பது கண்கூடு. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகளைச் சேர்ந்தவர்களால் அந்நாடுகள் முன்னேறியுள்ளனவா என்று கேட்டால் அத்தகைய கேள்விக்கு விடை கிடைக்காது. ஏனென்றால் பிற நாடுகளிலிருந்து வந்து சேர்ந்த அறிவுசார் மக்களின் பங்களிப்பு வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிகம்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளில் வேலைக்கு செல்வோரின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அறிவுசார் சமூகம் இந்தியாவிலிருந்து வெளியேறுவது குறித்து அவ்வப்போது ஆட்சியாளர்கள் கவலைப்படுவர். ஆனால் அவர்களை இந்தியாவுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான நடவடிக்கை களைத்தான் எடுப்பதில்லை.

கடந்த செப்டம்பரில் சிலிக்கான் பள்ளத்தாக்கில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவிலிருந்து வெளியேறுவோர் (பிரைய்ன் டிரெய்ன்) இந்தியா திரும்புவதற்கான காலம் கனிந்து வருகிறது என்றார். இந்தியாவிலிருந்து வெளியேறி வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறியுள்ள அறிவுசார் இந்தியர்களின் எண்ணிக்கை 36 லட்சமாகும். 2000வது ஆண்டுகளில் இருந்த எண்ணிக்கையைக் காட்டிலும் இது 83 சதவீதம் அதிகம். அதாவது கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவிலிருந்து வெளியேறுவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேதான் உள்ளது.

அதிகம் படித்த அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. வெளிநாடு களில் குடியேறிய அறிவு சார் சமூகத்தின் எண்ணிக்கை மொத்தம் வெளியேறியவர் களில் 62 சதவீதமாகும்.

பிற ஆசிய நாடுகளிலிருந்து வளர்ச்சி யடைந்த நாடுகளில் குடியேறியவர் களோடு ஒப்பிடுகையில் இந்தியா விலிருந்து வெளியேறியவர்கள் எண்ணிக்கைதான் அதிகம். சிங்கப்பூர் (55.8%), பிலிப்பைன்ஸ் (52.3%), சீனா (43.8%) என்ற அளவில் உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை 22 லட்சமாகும். இந்தி யாவுக்கு அடுத்த படியாக அதிக அறிவுசார் சமூகத்தை இழந்த நாடு மெக்சிகோ. இங்கிருந்து 12 லட்சம் பேர் வெளியேறி வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறியுள்ளனர்.









அறிவுசார் சமூகத்தில் 100 பேரில் 3 பேர் உயர் படிப்பு மற்றும் வேலைக்காக வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறி யுள்ளனர். அதேசமயம் டாக்டர்கள், நர்சுகளின் எண்ணிக்கை மிக அதிகம். 100 பேரில் 8 பேர் இந்திய டாக்டர்களாக உள்ளனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் 86 ஆயிரம் இந்திய டாக்டர்கள் புரிவ தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு அடுத்த இடத்திலிருக்கும் சீனா விலிருந்து வெளியேறிய டாக்டர்களின் எண்ணிக்கை 26 ஆயிரமாகும். அதே சமயம் இந்திய செவிலியர்கள் (நர்சுகளின்) எண்ணிக்கை 70,471 ஆக உள்ளது. உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களை உருவாக்கும் நாடு இந்தியாதான். ஆனால் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் டாக்டர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

ஏற்கெனவே இந்தியாவில் சுகாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்தியாவில் 1,800 பேருக்கு ஒரு டாக்டர் உள்ள நிலையில் இதுபோன்று டாக்டர்கள் அதிக எண்ணிக்கையில் வெளியேறுவது மனித வளத்தையும் பாதிக்கும்.

பெரும்பாலும் ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, சிலி, செக். குடியரசு, டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், கொரியா, லக்ஸம்பர்க், மெக்சிகோ, நெதர்லாந்து, நியூஸிலாந்து, நார்வே, போலந்து, போர்ச்சுக்கீசு, ஸ்லோவோக் குடியரசு, ஸ்லோவேனியா, ஸ்பெயின், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 34 நாடுகளுக்கு (ஓஇசிடி நாடுகள்) இந்தியர்கள் செல்கின்றனர்.

இருப்பினும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையில் செல்கின்றனர். இந்தியாவிலிருந்து அறிவுசார் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது அந்நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும் என்று சர்வதேச பொருளாதார அறிஞர் கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஆனால் இத்தகைய அறிவுசார் மக்களின் திறமைக்கேற்ற வேலை இந்தியாவில் கிடைக்கவில்லை என்பதுதான் யதார்த்தமான சூழலாகும்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இந்திய அறிவுசார் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவது நமக்கு சாதகம் என்று மோடி குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் அனைவரும் இந்தியாவுக்கு திரும்பினால்தான் சாதகம். அதற்கான காலம் எப்போது உருவாகும்?

முதல்பாளையப் போரில் (1799) வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்ட அடுத்த ஆண்டு (1800) மலபார் மற்றும் மைசூர் பகதியைச் சேர்ந்த பாளையக்காரர்கள் ஆங்காங்கே பிரிட்டிஷாரை எதிர்த்து இரண்டாவது பாளையப்போரை நடத்தினர்.

அவர்கள் திடீர் திடீரென்று பிரிட்டிஷ் படைகண் மீது தாக்குதல்களை நடத்தினர். நாளுக்கு நாள் அந்தத் தாக்குதல்கள் தான் கொரில்லாத் தாக்குதல்கள் (Guerrilla warfare) எனக் குறிப்பிடப்படுகின்றன.



பாளையக்காரர்களுக்கு ஆயுதங்கள் திண்டுக்கல்லிலிருந்தும் சேலத்திலிருந்தும் தயாராகி அனுப்பி வைக்கப்பட்டன. அப்போது கரூர் பகுதியிலிருந்த பிரெஞ்சுப் படையினர் அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தும் விதம் குறித்த பயிற்சியை அவர்களுக்கு அறித்தனர். சிவகங்கை மருது சகோதரர்கள், திண்டுக்கல்லில் கோபால் நாயக், மலபார் பகுதியில் வர்மா. மைசூரில் கிருஷ்ணப்பா மற்றும் துண்தாஜி ஆகியோர் பிரிட்டிஷாரை எதிர்த்துப் படைகளைத் திரட்டினர்.

# ஜமீன்தார்களாக பதவியிறக்கம் செய்யப்பட்ட மன்னர்கள்

1800 ஆம் ஆண்டில் இந்தப் படைகள் கோயம்புத்தூரைத் தாக்கின. பிரிட்டிஷ் படைகள் செல்லும் பாதைகளில் ஒளிந்திருந்து இவர்கள் கொரில்லாத் தாக்குதல்களை நடத்தினர். 1801இ ஆம் ஆண்டு வீரபாண்டிய கட்ட பொம்மனின் தம்பி ஊமைத்துரை இந்தப் படைகளை வழி நடத்தினார். இதனால் பாஞ்சாலங் குறிச்சி கோட்டை பிரிட்டிஷாரிட மிருந்தே மீண்டும் கைப்பற்றப்பட்டது. அங்கு சிறை வைக்கப் பட்டிருந்த கட்ட பொம்மனின் உறவுனர்கள் மீட்கப்பட்டனர். பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடும் மற்ற பாளையக்காரர்களுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து கட்டளைகள் பறந்தன. பிரிட்டிஷார் சிதைத்த கட்டிடங்களை மீண்டும் கட்டி உயிர்ப்பிக்கப்பட்டன. இருந்தாலும் ஆங்காங்கே சில பாளையக்காரர்களிடம் ஒற்றுமை இல்லாததால் இந்தப் போர் நீண்ட காலம் நீடிக்கவில்லை. இந்த ஒற்றுமையற்ற சூழ்நிலை பரிட்டிஷாருக்குச் சாதகமாக இருந்ததால் அவர்கள் மீண்டும் பாஞ்சலங்குறிச்சி கோட்டையைத் தகர்த்தனர். நவம்பர் 16, 1801 அன்று கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையைத் தூக்கிவிட்டுக் கொள்ளனறனர். பாஞ்சாலம்குறிச்சியில் மீண்டும் யாரும் குடியேறிவிடக் கூடாது என்பதற்காக கோட்டைப் பகுதியைச் சுற்றி ஆமணக்கு பயிரிட்டனர். உப்பு விளையும் உவர் நிலங்களாகவும் மாற்றினர்.

இந்த இரண்டு பாளையப் போர்களும் பிரிட்டிஷாருக்குச் சாதகமாக முடிந்திருந்தால் மொத்தத் தமிழகமும், பிரிட்டிஷார் வசமாகின. 1801 ஆம் ஆண்டு இயற்றிய ஒரு சட்டப்படி குறுநில மன்னர்கள் அனைவரும் "ஜமீன்தார்கள்" என்று பிரிட்டிஷாரால் அறிவிக்கப் பட்டனர். அதாவது பெரிய மன்னர்களாக இருந்தவர்களை சாதாரண ஜமீன்தார் களாகப் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.



# கேள்விகள் இங்கே! விடைகள்?

நீர்மத் தங்கம் என்று அழைக்கப்படுவது எது?

| | | | |
|---|---|---|---|
| | ட் | | ல் |

ஒட்டகச் சிவிங்கியின் பிறப்பிடம் எது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | | | ரி | | கா |

உலகில் உள்ள ஒரே இந்து ராஜ்ஜியம் எது

| | | | |
|---|---|---|---|
| | பா | | |

ராஷ்ட்ரீய இந்திய ராணுவக் கல்லூரி எங்குள்ளது?

| | | | |
|---|---|---|---|
| டே | | | |

ஆகாயப்படை பயிற்சி நிர்வாகக் கல்லூரி எங்குள்ளது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோ | | ம் | | | | |



**சரியான விடைகளை 20.01.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.**

**அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்
**மித்ராடைம்ஸ்**
**#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094**
**போன் : 044-23744661,23743007/8**

## நவம்பர் மாத புதிருக்கான விடைகள்



கேள்விகள் இங்கே! விடைகள்?

இந்தியாவின் தேசிய நூலகம் எங்குள்ளது

| | | | | |
|---|---|---|---|---|
| க | ல் | க | த் | தா |

சர்வதேச அணுசக்தி நிலையம் எங்கே உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| வி | ய | ன் | னா |

உலக அமைதிப் பணிக்காக அமெரிக்கா வழங்கும் விருது எது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டெ | ம் | பி | ள் | டு | ன் |

தாஸ்காபிடல் என்ற நூலை எழுதியவர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கா | ர் | ல் | மா | ர் | க் | ஸ் |

பிரெஞ்சு நாட்டின் "செவாலியர் விருது யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெ | ப் | போ | லி | ய | ன் |

சரியான விடைகளை 20.11.2015-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
மித்ராடைம்ஸ்
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094
போன் : 044-23744661,23743007/8


மித்ரா டைம்ஸ்
நவம்பர் - 2015 | 26

**அனுப்பியவர் : எஸ்.ராமரங்கநாதன்**
**ஓம்சக்தி நகர், கண்ணார்பாளையம்**
**காரமடை - 641 104**

## ஓவியம் வரைந்தவர்



**எஸ்.ஜானகி**
**VIII-B**
**GOOD SHEPHERD**
MATRICULATION HIGHER SECONDARY SCHOOL



# பதப்படுத்தப்பட்ட இறைச்சி

## ஓர் எச்சரிக்கை



பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து: உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேநேரம் இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு அதிக தண்ணீர் செலவிடப்படுவதால் எதிர்காலத்தில் இந்தியாவில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சிவப்பு இறைச்சி, பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்பதால் இதய நோய், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதை இப்போது உறுதி செய்துள்ள உலக சுகாதார நிறுவனம், சிவப்பு இறைச்சியை உண்பதால் குடல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது என்று எச்சரித்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த புற்றுநோயாளிகளில் 19 சதவீதம் பேர் புகையிலைப் பழக்கத்தாலும் 3 சதவீதம் பேர் இறைச்சி சாப்பிடுவதாலும் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



இந்தியாவில் இறைச்சி உண்ணும் பழக்கம் அண்மைகாலமாக அதிகரித்து வருகிறது. ஆனால் வெளிநாடுகளை ஒப்பிடும்போது இது மிகவும் குறைவு. சீனாவில் ஒருவர் ஆண்டுக்கு 10 கிலோ கோழி இறைச்சி சாப்பிடுகிறார். இது இந்தியாவைவிட 10 மடங்கு அதிகம். இதேபோல மாட்டிறைச்சி உண்பதிலும் சீனா மற்றும் மேற்கத்திய நாடுகளைவிட இந்தியா மிகவும் பின்தங்கியே உள்ளது.



இந்தியாவில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதும் மிகவும் குறைவாகும். பெரும்பாலும் கோழி இறைச்சிதான் அதிகம் பயன்படுத்தப் படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இறைச்சி சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்புகளைவிட இறைச்சி ஏற்றுமதியால் அதிக பாதிப்புகள் ஏற்படுகிறது.

உலகளாவிய அளவில் இறைச்சி ஏற்றுமதிமதியில் இந்தியா முன்னணியில் உள்ளது. பொதுவாக இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு அதிக தண்ணீர் செலவிடப்படுகிறது.

ஒரு கிலோ இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதிக்கு தயார் செய்ய சுமார் 16 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அதேநேரம் ஒரு கிலோ காய்கறிகளை பதப்படுத்தி தயார் செய்ய 320 லிட்டர் தண்ணீர் இருந்தால் போதுமானது.

இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் தனிநபருக்கான தண்ணீர் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை உள்ளது. ஆண்டுதோறும் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட காரணங்களால் நூற்றுக் கணக்கான குழந்தைகள் மடிகின்றன.

இந்நிலையில் இறைச்சி பதப்படுத்துதலுக்காக அதிக தண்ணீரை செலவிட்டால் எதிர்காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்புஇதுதவிர இறைச்சி பதப்படுத்துதலால் சுற்றுச்சூழலும் அதிகம் பாதிக்கப்படுகிறது. உலகளாவிய அளவில் கால்நடைகளால் 18 சதவீதம் பசுமைக்குடில் வாயு வெளியாகிறது.

மாட்டிறைச்சி உற்பத்திக்கு இதர கால்நடைகளை விட 28 மடங்கு கூடுதலாக நிலம் தேவைப்படுகிறது. இதனால் பெரும்பாலான நாடுகளில் மாட்டிறைச்சிக்கு பதிலாக காய்கறி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இந்திய மாட்டுப் பண்ணைகளில் இப்போது அதிக அளவில் ஆன்டிபயாடிக் பயன்படுத்தப்படுகிறது. இதன்காரணமாக மருந்துகளுக்கு கட்டுப்படாத பாக்டீரியா வின் பாதிப்பு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இத்தகைய பாக்டீரியாவால் இந்தியாவில் ஆண்டு தோறும் 58 ஆயிரம் பச்சிளம் குழந்தைகள் உயிரிழக்கின்றனர்.

இது ஓர் அபாய எச்சரிக்கை ஆகும்.


**மித்ரா டைம்ஸ்** மாத இதழ்

**விளம்பரக் கட்டணம்.**

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

தொடர்புக்கு
044-23743007
044-23744662

# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 600 094.

# FAKING INTOLERANCE

There is a concerted campaign by presstitutes to make India intolerant. As a pseudo:

If you criticise and oppose me,it is intolerance,if I criticise and oppose you that is freedom of speech. As a Pseudo I want to have it both ways.

A letter by a Muslim woman who debunks the intolerance of Pseudos.




Sofiya Rangwala

Amidst a fake atmosphere of Intolerance being created in India, in the last 1 month, I owe my version of what I, a Muslim lady, living and working in India feel like. This has been due from me since sometime. Now, I feel the water has gone above the head and I too need to share my views. So, here it is.

I am a Muslim lady, a practicing dermatologist by profession and I run my own high- end laser skin clinic, in Bangalore. I was brought up in Kuwait and at the age of 18, came to India to pursue medical education. I decided to stay back in India while almost all my friends left India for greener pastures. Not even once did I consider that being a Muslim could create a problem for me, as my sense of nationalism held me back to my roots and so here I am, serving my country since the last 20 years.

I studied in Manipal, Karnataka. I lived alone like all students do. While I was in college, all my professors were Hindus and almost all the people who I would interact with were Hindus as well. There is not a single incident when anyone showed partiality towards me based on my gender or religion. Every single one of them was kind and in fact sometimes, I felt as though they made an extra effort to make feel like I was one of them. I am ever so grateful to all of them for making my life in Manipal as comfortable as it could get.

After leaving Manipal, I relocated to Bangalore with my husband. By then I had been married and so we decided to make our life in Bangalore. There is a reason, why we chose Bangalore and here is where I will talk about my husband. He is a Muslim too, with a very typical first name, Iqbal. He is an aerospace engineer with MTech from IIT-Chennai and PhD from Germany. His profession takes him to the most highly secured organizations of India, like DRDO, NAL, HAL, GTRE, ISRO, IISc, BHEL; you name it and be assured that he has visited all of them without any hassles. Not even once has been stripped off or asked for special security clearance or any such bias has been shown towards him. And NO, things have not changed even after Modi gov came into power. Things are in fact more disciplined and streamlined even at government organizations, from what I hear from my husband. As a matter of fact, Iqbal has been completely stripped each time he traveled to US and was under secret surveillance while he was doing his PhD in Germany, after the 9/11 attacks on US. We literally received a letter from the German government that he has been cleared and is not anymore under suspicion. Talk about Muslim paranoia! Its very understandable too due to the current situations in the world. My husband is highly respected and loved by the people he works with, and all of them happen to be Hindus. None of this has changed even in recent times, so Intolerance is just a word for us on a practical basis.



Aamir khan

I opened my clinic last year, just before Modi gov came into power. I am a law-abiding citizen and I file my taxes like service tax on a monthly basis. I have never indulged in any activities, which could put me into any kind of trouble. I am comfortably running my clinic, which is doing very well, thanks to all my patients and clients, who all happen to be Hindus. A handful of my patients are from other communities. My entire staff is Hindu, and believe me when I say that they take better care of my clinic than I could any day! I interact with bankers, government officers and with so many people on a daily basis. Not even once in the last 20 years, did I have the need to even think of leaving India! My entire family lives abroad and all that I need to do is just decide that I don't want to stay here. I have open offers of opening clinic in Kuwait, which would fetch me huge amount of revenue and yet why should I stay in India, if I am not happy and if I am facing any kind of bias?

In Kuwait, we are considered as NOBODY. Yes, despite being in Kuwait for the last 40 years or so, my family is still considered as expatriates, with no rights. We need to renew our resident permit periodically and the laws there constantly keep changing, making the life of

expatriates only harder. We have to strictly comply with their rules and laws, which is fine but we are openly discriminated. They consider Asians as third grade people, while giving preference to their citizens, Arabs and Whites. We are not unhappy there but we have no sense of belonging either. At least, I never had and never have even when I visit Kuwait now. We are Muslims in a Muslim country, and yet we are considered as Indians with no special regards. I figured long back ago, that India is the only country, where I will have a sense of belonging. You are an Indian-American in US, Indian-Canadian in Canada, Indian-British in UK and so on but only in India you are an Indian. Period. Rest can say whatever they want and defend their choices but this is a fact. You can only feel at home, in your own home. I have lived in different places and everywhere I stand out but in India. No body in India asks me, 'Are you an Indian?', and this is what makes all the difference. a


Salman khan

So, what are these celebrities ranting about? An ordinary citizen like my husband and I are not facing any such issues, then what have they faced? Why is Amir Khan's wife, Kiran Rao feeling so afraid? They are prominent people, living in posh localities, their children study in the best of schools and they have personal security escorting them at all times. I travel alone everyday and yet don't feel afraid. I want to know as a responsible citizen, from Amir Khan and Shahrukh Khan as well, why did they make such irresponsible statements and spoil the image of the 13 crores of Muslims in India? Who the hell are they to make public statements based on their personal perception? Who gave them the liberty to tarnish the image of my country on an International level, that Muslims are not safe in India? How dare Pakistan invites them to stay in Pakistan? I feel hurt when I read the statements of my Hindu friends on Muslims. I feel afraid that they are being pushed to the limit and the tolerance and acceptance that I have enjoyed all these years, might just vanish! I feel afraid that my own people might shun me and I may get alienated in my own country, because of a handful of ungrateful bunch of fools! How long can I expect majority of Hindus to tolerate this nuisance? It's high time that Muslims understand the value of the freedom and acceptance that we enjoy in India and if not, I pray that my Hindu fellow citizens continue to keep their patience.

**sd/-**
**Sofiya Rangwala**



# டிசம்பர் மாத பலன்கள்




வீரமும் வேகமும் கொண்ட மேஷம் ராசி அன்பர்களே! உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளால் இடையூறு ஏற்படும். மனம் தெளிவாக இருக்கும். எது நடந்தாலும் தைரியாமாக இருப்பீர்கள். அப்பாவின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இம்மாதம் 9ம் தேதிவரை படிப்பில் மந்தநிலை நீடிக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் சிரமங்கள் இருக்கும். கணவன் மனைவி அன்னியோன்னியம் சிறப்பாக இருக்கும். தொழில் உத்தியோகத்தில் தடை இருக்கும். அதிகமான அலைச்சலால் உடல் நலம் பாதிக்கப்படும். கொஞ்சம் மருத்துவ செலவும் உண்டாகும். அழகரை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** சென்னை குன்றத்தூர் முருகனை தரிசித்து வாருங்கள். ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு உதவுங்கள்.




பேச்சினாலேயே பிறரை வெல்லும் ரிஷபம் ராசி அன்பர்களே!

அப்பா வின் உடல் நலத்தில் கவனம் தேவை. மன நிலை சிறப்பாக இருக்கும். வாகனங்களை கையாளுவதில் கவனம் தேவை. இம்மாதம் 9ம் தேதிக்கு பிறகு தாய் மாமனுடன் கருத்துவேறுபாடு. உண்டாகும்.

இம்மாதம் 19ம் தேதி வரை குடும்பத்தில் குழப்பங்கள் நிலவும். ஏதோ ஒரு பாரம் மனதில் அழுத்திக் கொண்டிருக்கும். காலபைரவரை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** கும்பகோணம் கும்பேஸ்வரரை தரிசித்து வாருங்கள். ஏழை மாணவனின் கல்விச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.




சிந்தனையில் வேகம் கொண்ட மிதுனம் ராசி அன்பர்களே! தொழில் உத்தியோகம் புது உத்வேகத்துடன் சிறப்பாக இருக்கும். அரசு தொடர்பான செயல்பாடுகள் அனைத்தும் எளிதில் நிறைவடையும். பண வரவு திருப்திகரமாக இருக்கும், மனதில் தெம்பு அதிகரிக்கும். இம்மாதம் 9ம் தேதி வரை ஷேர் மார்க்கெட்டில் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். நிலம் வீடு வகைகளில் பிரச்சினைகள் உண்டாகும் இம்மாதம் 11ம் தேதிக்கு பிறகு நிலைமை சீராகும். கூர்மையான கத்தி போன்ற ஆயுதங்களை கையாளுவதில் கவனம் தேவை. . லட்சுமிஹயக்கிரீவரை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** திருநெல்வேலி நெல்லையப்பரை தரிசித்து வாருங்கள். அன்னதானம் செய்யுங்கள்.




எப்பொழுதும் சிந்தித்து செயல்படும் கடகம் ராசி அன்பர்களே! பெருந்தன்மையான குணத்தினால் அனைவருக்கும் உதவுவீர்கள். வயிற்று பகுதியில் வலி உண்டாகும். பணம் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். இம்மாதம் 9ம் தேதி வரை கமிஷன் வியாபாரம் சிறப்பாக இருக்கும். இம்மாதம் 19ம் தேதிக்கு பிறகு பெண்களால் பிரச்சினை உண்டகும். எந்த வகையில் கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் மிகவும் தைரியமாக எதிர் கொள்வீர்கள். ஆன்மீகப் பயணம் உண்டாகும். இம்மாதம் 11ம் தேதிக்கு பிறகு மின்சாரம் தொடர்பான தொழில்களில் கவனம் தேவை. சிவனை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்

**பரிகாரம்:** நாமக்கல் அனுமனை தரிசித்து வாருங்கள். கோயில் கும்பாபிஷேகத்திற்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்.




தலைமை பண்பு கொண்ட சிம்மம் ராசி அன்பர்களே! தொழில் உத்தியோகத்தில் மந்த நிலை நீடிக்கும். அதிக மான செலவுகள் உருவாகும். பேச்சில் கவனம் தேவை. இம்மாதம் 9ம் தேதிவரை கமிஷன் வியாபாரம் சிறப்பில்லை. குழந்தைகளின் நடவடிக்கையால் மனதில் கவலை தோன்றும். வாழ்க்கை துணையுடன் நெருக்கம் அதிகரிக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. வாகன பராமரிப்பில் கவனம் தேவை. மஹாலட்சுமியை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** சமயபுரம் மாரியம்மனை தரிசித்து வாருங்கள். கட்டிடத் தொழிலாளிகளுக்கு உதவுங்கள்.




கலைகளில் நிபுணத்துவம் பெற்ற கன்னி ராசி அன்பர்களே! உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரம் மிகவும் சிறப்பாக இருக்கும். பண வரவும் மனம் மகிழத்தக்க வகையில் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். அவ்வப்போது சிறு குழப்பம் உண்டாகும். அம்மாவுக்கு ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு மருத்துவ செலவுகள் உண்டாகும். நண்பர்களை விரோதித்துக்கொள்ள வேண்டாம். சூரியநாராயணனை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** மயிலாடுதுறைகுத்தாலம் பாதையிலுள்ள க்ஷேத்ர பாலகரை தரிசித்து வாருங்கள். ரத்ததானம் செய்யுங்கள்




சொல்லும் செயலும் ஒன்றாக மதிக்கும் துலாம் ராசி அன்பர் களே! பொருளாதார நிலை மனதிற்கு வருத்தம் அளிக்கும். குடும்பத்திலும் சச்சரவு தோன்றிக் கொண்டிருக்கும். இம்மாதம் 9ம்தேதி வரை முதலீடுகளில் கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். இம்மாதம் 11ம் தேதி வரை சகோதரர்கள் உதவி இருக்கும். அனைத்து செயல்களுக்கும் மனைவியின் ஆதரவு இருக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் தலை தூக்கும். எல்லா விஷயங்களிலும் முடிவெடுப்பதில் கவனம் தேவை. நரசிம்மரை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** தஞ்சை பிரகதீஸ் வரரையும், அங்கேயே வீற்றிருக்கும் வாராஹியையும் தரிசித்து வாருங்கள்.ஏழைகளின் மருத்துவச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.




செயல்களில் வேகம் மிக்க விருச்சிகம் ராசி அன்பர்களே! மனப் போராட்டம் அதிகமாக இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. இம்மாதம் 11ம் தேதிக்கு பிறகு செயல்களில் வேகம் பிறக்கும். எதிலும் தைரியமாக செயல்படுவீர்கள். இம்மாதம் 9ம் தேதி வரை ஷேர் மார்க்கெட் முதலீடுகள் லாபம் தரும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். குழந்தைகளுக்கு மருத்துவ செலவுகள் செய்ய நேரிடும். பெண்களின் உதவி கிடைக்கும். ஆஞ்சநேயரை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** கன்னியாகுமரி பகவதி அம்மனை தரிசித்து வாருங்கள். பசுவிற்கு அகத்திக்கீரை கொடுங்கள்.






ஆழ்ந்த அறிவு கொண்ட தனுசு ராசி அன்பர்களே! படிப்பில் மேன்மை நிலை உருவாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் தொல்லை அதிகரிக்கும். வீடு நிலம் வாகனம் போன்ற வகைகளில் சகோதரர்களுடன் சச்சரவுகள் தோன்றும். பணவரவில் தடை உருவாகும். மனதில் விரக்தி தோன்றும். தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். இம்மாதம் 9ம் தேதி வரை கடித போக்குவரத்து பத்திரம் பதிவு போன்றவை தடை இல்லாமல் நடை பெறும். சங்கரநாராயணனை வழி படுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** சென்னை மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மனை தரிசித்து வாருங்கள். சாலை பணியாளர்களுக்கு ஆடைகள் கொடுத்து உதவுங்கள்




அனைவரின் அன்பை பெற்ற மகரம் ராசி அன்பர்களே! தொழில் உத்தியோகம் மிகவும் சிறப்பாக இருக்கும். உயர் அதிகாரி கள் எல்லா வற்றிலும் உறுதுணையாக இருப்பார்கள். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். கமிஷன் வியாபாரம் சிறப்பாக இருக்கும். படிப்பில் மேன்மை உண்டாகும். தாய் மாமனின் உதவி கிடைக்கும். தாய் தந்தையின் ஆலோசனைப் படி செயல் படுவது நல்ல பலனை தரும், மின்சார உபகரணங்களை கையாளுவதில் கவனம் தேவை. முருகனை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருபுவனம் சரபேஸ்வரரை தரிசித்து வாருங்கள். வயதானவர்களுக்கு கம்பளியும், செருப்பும் வாங்கிக் கொடுங்கள்.




விவேகம் மிக்க கும்பம்ராசி அன்பர் களே! குடும்பத்தில் அனைவரது ஒத்துழைப் பும் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. தொழில் சிறக்கும் அதிகாரிகளின் ஆலோசனை தொழில் மேன்மைக்கு கை கொடுக்கும். இம்மாதம் 9ம் தேதி வரை வியாபாரம் சுமாராக இருக்கும். இம்மாதம் 11ம் தேதிக்கு பிறகு சகோதரர்களுடன் சச்சரவு உண்டாகும். இம்மாதம் 19ம் தேதி வரை பெண்களின் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவும். அம்பாளை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** சென்னை திருவல்லிக் கேணியில் அருள்பாலிக்கும் பார்த்தசாரதிப் பெருமாளை தரிசித்து வாருங்கள். முதியோர் இல்லங்களுக்குச் சென்று உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.




எல்லாருக்கும் வளைந்து கொடுக்கும் மீனம் ராசி அன்பர்களே! மனம் தெளிவாக வேலை செய்யும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். தந்தையின் உடல்நலம் பாதிக்கப்படும். கணவன் மனைவியிடையே பூசல்கள் தோன்றும். இம்மாதம் 19ம் தேதிக்கு பிறகு பிரச்சினைகள் அதிகரிக்கும். இம்மாதம் 11ம் தேதிக்கு பிறகு வாகன யோகம் கிடைக்கும். இம்மாதம் 9ம் தேதிவரை வியாபாரம் சிறப்பாக இருக்கும். உடலில் அசதி தோன்றும் மருத்துவ செலவுகள் செய்ய நேரிடும். துர்க்கையை வழிபடுவதின் மூலம் வாழ்க்கையில் வளங்களை பெறலாம்.

**பரிகாரம்:** பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரை தரிசித்து வாருங்கள். தந்தையிழந்த பிள்ளைக்கு உதவுங்கள்.

அறிவுச்சுடர்

# விசாலினி என்னும் விருட்சம்

13 வயதிற்குள், 5 உலக சாதனைகள், 12 சர்வதேச கணினிச் சான்றிதழ்கள் பெற்றவர். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் பாராட்டை, தன் 3 வயதிலேயே பெற்றவர். தன் வீடு முழுவதையும் பரிசுக்கோப்பைகள், கேடயங்கள், சான்றிதழ்கள், மற்றும் பதக்கங்களால் நிறைத்து இருப்பவர்.


Google நிறுவனத்தின் சர்வதேச உச்சி மாநாட்டில் ஒருமணி நேரம் சிறப்புரை ஆற்றிய இக்குழந்தையைப் பார்த்து, பன்னாட்டு அறிஞர்கள் வாயடைத்துப் போயினர். அங்கு The Youngest Google Speaker என்ற பட்டமும் பெற்றார் விசாலினி.

11 வயது குழந்தையாக இருக்கும் போதே, 10 சர்வதேச கணினி மாநாடுகளுக்குத் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டு, Computer Networking தொழில்நுட்பம் குறித்து சிறப்புரை ஆற்றி, உலகஅரங்கில் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டியவர். சர்வதேச கணினி மாநாடுகளில்பன்னாட்டு அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் கூட பார்வையாளராக மட்டும் செல்வதற்கே அதாவது attend பண்ணவே 2000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை கட்டணம் செலுத்த வேண்டும்.ஆனால் விசாலினியோ, 11 வயது குழந்தையாக இருக்கும்போதே, 10 சர்வதேச கணினி மாநாடுகளிலும் 70 முதல் 80 நாட்டு அறிஞர்கள் மத்தியில், தலைமை உரையாற்றிய பெருமைக்குரியவர்.

She has been invited as the Chief Guest for 10 International Conferences and Delivered Keynote Speeches there.

11வயதில், தனக்குரிய இணைய தளத்தைத் தானே வடிவமைத்தவர்

அதுவும் 24 மணிநேரத்தில். தான் கற்றதோடு மட்டும் நிறுத்தவில்லை இவர்.



கற்பிக்கவும் தொடங்கினார். தன் 11வயதில், 25 க்கும் மேற்பட்ட இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு அழைக்கப்பட்டு அங்கு Final Year மாணவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் (HOD's), முதல்வர்களுக்கு ஷிமீஸீவீஸீணீக்ஷீ வகுப்புகளை நடத்தியவர்.

இவரது திறமையை அறிந்த Indian Overseas Bank நிர்வாகம் சர்வதேச தலைமையகத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்த போது விசாலினிக்கு வயது 12 தான். அங்கு உலக அளவிலான மிளிஙி நிவி தலைமையிலான IT Professional களுக்கு 1/2 மணி நேரம் வகுப்பு எடுக்கச் சொன்னார்கள். ஆனால் விசாலினியோ 2 மணி நேரம் பாடம் நடத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தாள்.

தன் சொந்த முயற்சியால் மட்டுமே, உலகின் பல்வேறு நாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்ற விசாலினி,

ஓர் இந்தியர். அதுவும் தமிழர்.

ஆம்! உண்மை தான். தமிழனின் மூளை தரணியையே வெல்கிறது.

பிசிலி நிறுவனம் The Pride of India - Visalini என பாராட்டிய போது அவருக்கு வயது 11. TEDx சர்வதேச மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய விசாலினி 11 வயதில், The Youngest TEDx Speaker என்ற பட்டமும் பெற்றார். London, World Records University, Dean தாமஸ் பெய்னிடம் பாராட்டு பெற்றார் விசாலினி.

Times Now English News நிறுவனமோ ஒருபடி மேலாக விசாலினியின் வீட்டிற்கே வந்து 2 நாட்கள் தங்கி அவரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, The Amazing Indian - Visalini என அரை மணி நேர Documentry படத்தை ஒளிபரப்பியது.

நியூ சவுத் வேல்ஸை தலைமையிட மாகக் கொண்டு, காமன் வெல்த் ஆப் ஆஸ்திரேலியாவால் தொடங்கப்பட்ட ஆஸ்திரேலியாவின் முன்னணிச் செய்தி நிறுவனமான SBS ஆஸ்திரேலியா, உலகின்

74 மொழிகளில் 174 நாடுகளில் விசாலினியின் அரைமணி நேர பேட்டியை ஒலிபரப்பி கௌரவப் படுத்திய போது விசாலினிக்கு வயது 13 தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் விசாலினியின் தந்தைக்கு வந்தது ஒரு Phone Call. Our Prime Minister Mr. Modi wants to meet your Daughter Visalini என்று. பிரதமரைக் கண்ட விசாலினி, எழுந்து நின்று தமிழில் வணக்கம் என்று சொல்ல, பதிலுக்கு தமிழிலேயே வணக்கம் என்றார் பிரதமர் மோடி. பிரதமர் மோடி விசாலினியுடன் உரையாடிய போது, இந்தச் சிறுவயதில் நீ செய்துள்ள சாதனைகளே, இந்திய நாட்டிற்கான சேவைதான் என்று நெகிழ்ந்து பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் கருணாகரனோ, விசாலினி இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் முக்கியப் பங்காற்றுவார் என்று பெருமை பொங்க வாழ்த்தினார். உலக அளவில் பாராட்டு பெற்றுள்ள விசாலினிக்கு, தான் இன்னும் தமிழக முதல்வரின் பாராட்டைப் பெற வில்லையே என்பது மிகப்பெரிய ஆதங்கம்.

உங்களுக்குத் தெரியுமா, சாதாரண மனிதர்களின் அறிவுத்திறன் 90 முதல் 110 வரை இருக்கும். கம்ப்யூட்டர் ஜாம்பவான் பில்கேட்ஸுக்கு மினி level 160. ஆனால் விசாலினியின் மினி level 225. உலகிலேயே மிக அதிக அறிவுத்திறன் கொண்டவர் என்ற உலக சாதனை படைத்த விசாலினி, நம் இந்தியாவின் தமிழ்நாட்டின் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். உலகிலேயே இல்லை இப்படி ஒரு குழந்தை என்று சாதித்துக் கொண்டிருக்கும் விசாலினியின் தந்தை ஓர் எலக்ட்ரீசியன். தாத்தாவோ வெல்டராக இருந்து, பின் தமிழாசிரியராக ஆனவர்.

விஷாலினி என்னும் விருட்சத்தின் சாதனைகளை நம் வருங்கால சந்ததயினருக்கு உணர்த்துவோம்.

# சூப்பர் மேன் இன்றும் என்றும் சூப்பர் மேன்

சூப்பர் மேனை தெரியதவர்கள் யாரும் இருக்க முடியாது, சினிமா உலகில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை



அனைவரையும் பிரம்பிக்க வைத்த அந்த சாகச நாயகன் கிறிஸ்டோபர் ரீவ்ஸ், உலகின் பலசாலி என்று கொண்டாடப் பட்ட சூப்பர் மேன் வாழ்வில் சோகங்கள் இருக்கின்றன.

நியூயார்க்கில் 1952 செப்டம்பர் 25ல் பிறந்த இவர் தனது நான்கு வயதை எட்டியபோது பெற்றோர் விவாகரத்து செய்து கொண்டனர். பின்னர் கிறிஸ்டோபர் தனது சகோதரன், தாயாருடன் சேர்ந்து வாழத் தொடங்கினார். சகோதரர்கள் இருவருக்கும் நடிப்பது என்றால் மிக விருப்பம்.

கல்லூரிப் படிப்பை முடிக்கும் தருவாயில் இவருக்கு உலகப் புகழ் பெற்ற ஜூலியட் மேடை கலைப் பள்ளியில் நடிப்பு பயிற்சி பெறும் வாய்ப்பு கிட்டியது. அதில் பயின்ற போதே அவருக்கு நடிக்கம் வாய்ப்புகள் வந்தன. முதன் முதலாக 1976ல் புகழ் பெற்ற நடிகையான கேத்ரின் ஹெப்பர்னுடன் நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. எ.மேட்டர் ஆப் கிராவிட்டி, என்ற இசை நாடகத்தில் நடித்தார். 1978ல் அவருக்கு சினிமாவில் சூப்பர் மேனாக நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. இதற்காக 200 புதிய முகங்களை பல்வேறு கேமரா சோதனைகளுக்கு உட்படுத்தினர். இறுதியில் தேர்வானவர் கிறிஸ்டோபர் தான்.

முதல் படமே சூப்பர் டூப்பர் ட், அதன்பின் 16 திரைப்படங்கள் 12 டெலிபிலிம்கள், 150 மேடை நாடகங்களில் நடித்தார். சாகச காட்சிகளில் கூட டூப் போடாமல் இவரே நடித்தார். நடிப்பைத் தவிர சாகசத்திலும் கில்லாடி விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டு சிறிய விமானத்தை தனியாளாக இயக்கி அட்லாண்டிக் பெருங்கடலை கடந்திருக்கிறார். படகை ஓட்டவும் இவருக்கு தெரியும். முத்துக் குளித்தல் பளிச்சறுக்கு, குதிரை ஏற்றம் என்று பல கலைகளையும் கற்று வைத்திருந்தார்.

1995 மே மாதம் 27ம் தேதி குதிரை மீது அமர்ந்து சாகசங்கள் செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று குதிரை மிரண்டு, அவரை பின்பக்கமாக தூக்கி எறிந்தது. குதிரையின் கடிவாளத்தில் கிளிஸ்டோபரின் கை மாட்டிக் கொள்ள தலைக்குப்புற கீழே விழுந்தார். இதில் அவருடைய முகுகெலும்புகள் இரண்டு நொறுங்கின. அந்த நொடியே அவரது கருத்துக்கு கீழ் உள்ள உடல் முழுவதும் செயலிழந்தது. மூச்சுக் கூட விடமுடியாமல் தவித்தார். உடனடி மருத்துவம் தான் அவர் உயிரை காத்தது.

மிக சிக்கலான அறுவை சிகிச்சை மூலம் அவரது தலையை முதுகெலும் போடு மருத்துவர்கள் இணைத்தனர். தனது வாழ்நாளில் ஒவ்வொரு நெடியையும் சுறுசுறுப்புடன் கழித்த அவர் தனது சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாத நிலைக்கு போனது எவ்வளவு பெரிய கொள்ளும் முடிவுக்கு சென்றார்



பின்பு தனது மனைவிக்காகவும் குழந்தை களுக்காகவும் வாழவேண்டும் என்று தீர்மானித்தார்.

முதுகெலும்பு காயங்களுக்கான ஆராய்ச்சிக்கு அதிகம் செலவிடும்படி ஒரு அறக்கட்டளையை தொடங்கினார். 1998ல் இவர் எழுதிய ஸ்டில் மீ என்ற சுயசரிதை புத்தகம் அதிகம் விற்பனையாகும் பட்டியலில் இடம் பெற்றது.

செவிலியர்களின் உதவியோடு உலகில் எங்கிருந்து வந்தாலும் அந்த அழைப்புகளை ஏற்றுக் கொண்டு தன்னம்பிக்கை உரை நிகழ்த்தினார். இவர் தனது வேதனை எல்லாத்தையும் மறைத்து பேசும்போது மக்கள் கண்ணீர் சிந்தினர். இவருக்கு சிகிச்சை அளித்த வாஷிங்டன் பல்கலைக்கழக மருத்துவர் டாக்டர் ஜான் மெக்டொனால்ட், தன் வாழ்நாளில் தான் சந்தித்தவர்களில் கிறிஸ்டோபர் ரீவ்ஸைப் போன்ற மனோ திடத்தை வேறு எவரிடத்திலும் கண்டதில்லை என்றும், இந்த காயம் ஏற்பட்டவர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். ஆனால் ரீவ்ஸ் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறார். அவரிடம் இருந்து நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம் என்றும் கூறினார்.

விபத்து நிகழ்ந்ததிலிருந்து கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகள் சூப்பர்மேன் என்ற பெயருக்கேற்ப அசாதாரணமான மனோதிடத்தை உலகுக்கு படம் பிடித்துக் காட்டிய கிரிஸ்டோபர் ரீவ்ஸ் 2004 அக்டோபர் 10ல் தனது 52வது வயதில் காலமானார். அவரது உடல் நம்மை விட்டு மறைந்திருக்கலாம், ஆனால் அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் தன்னம்பிக்கை என்ற ஒளி என்றும் மறையாதிருக்கும்.

# Which board to choose from SSC, CBSE, ICSE and IB ?

Choosing the board most suitable for your child can be a harrowing experience.Many parents are confused with which board to choose. There are namely four common boards like the CBSE (Central Board of Secondary Education),ICSE (Indian Certificate is Secondary Education), IB (International Baccalaureate)and the SSC (State Boards).

A common misconception is that CBSE and ICSE are both education boards similar to SSC boards of state government. CBSE is an education board but ICSE is the certificate offered after completion of the course and it is not a board. Still ICSE board is commonly used to mention this course.

Secondary School Certificate, commonly known as SSC, is a public examination taken by students in Maharashtra, Madhya Pradesh, Gujarat, Andhra Pradesh and Goa in India, Bangladesh, and Pakistan , after successfully completing at least ten years of schooling. It is followed by Higher Secondary (School) Certificate (HSC). SSC is an equivalent to GCSE in the England.

State Boards are comparatively limited in the content and subjects as compared to other boards.The syllabus is easier and hence less stressful to the students.These schools being state centric are excellent for parents planning to stay in the same state for life. The State language is compulsory. As the concepts are generally lagging the kids have to be given external coaching, if planning for IIT, CAT and other competitive exams. These schools are great for kids who are focused on extracurricular activities like sports etc.

CBSE

Central Board of Secondary Education: Know as the CBSE board. It prepares the syllabus for students up to Class 12. The curriculum is set by National Council of Educational Research and Training (NCERT). The board conducts India's two nation-wide board examinations: the All India Secondary School Examination for Class 10 and the All India Senior School Certificate Examination for Class 12.

Many schools are affiliated to CBSE syllabus.All major cities have CBSE schools, hence easy to move around in the country. The curriculum is very good when it comes to general knowledge and general subjects. It allows the kids to experience subjects without going deep into them thus helping them to choose the focus after Xth. This board prepares kids for competitive exams like the IIT, CAT, IIM and all entrance exams which are held at national level and it gives better chances for appearing for Armed Forces Exams, NDA, IAS, IFS, IPS.etc. The schools also focus a lot on extracurricular activities Most of which are compulsory thus assuring an overall growth of the child. One disadvantage is the length of the syllabus. It has vast syllabus

ICSE

The ICSE is short form of Indian Certificate for Secondary Education. It was established by the University of Cambridge Local Examinations Syndicate. The council conducts an all India exam for Class 10 called ICSE(Indian Certificate for Secondary Education) and for class 12 called the Indian School Certificate (ISC).

The ICSE board follows the basics strengthening syllabus. all the introduction is repeated and then quadratic equations are handled. Even questions are based on the basics. This makes the basics of the topic very strong. This helps the student a lot of confidence when higher studies are involved. As his basics are very strong, half the job is done. There is lot of focus on language and literature. So good for kids wanting to make a career which involves writing, reading, talking, debating, arguing, surveying, historians, geologist etc. This curriculum is very good when it comes to general knowledge and general subjects . However it is unnecessarily vast.

This board is also good for competitive exams like IIT, IIM, CAT, All India entrance exams, but needs extra time and coaching. Even Armed forces exams can be appeared after this board. ICSE syllabus is particularly important for students who prefer higher education abroad. Exams like GRE, TOEFLand GMAT have a lot of verbal ability testing. Its also excellent for those who are migrating from abroad as the curriculum is close to international board. One important distinguishing feature in ICSE syllabus is the importance given to projects. Projects are very important and they form the basis of marking scheme in the performance of the student. This makes the student extremely active and it improves his thinking ability.

IB Board

This board is excellent for kids whose parents are globe trotters as it enables kids to get admission into any IB school across the world. There are very few students in each batch, hence ensures quality focus on each child. The syllabus is taught in most interesting and interactive way with the best of equipments. The overall atmosphere in the school is international, with kids taking teachers as their equals. However these schools can be extremely expensive!

What we have attempted here is to give an non biased analysis of each schools. However each board has its own merits and demerits. The choice is up to you to decide which syllabus is most suited for your child.

You are requested to forward this to all parents in your contact sphere who are going to take school